Registered as a NewsPaper

விலை 7.00 ரூபா




# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 14

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–21 | 05–07–2004 | திங்கட்கிழமை | ஓசை –138

# அரசியல்வாதிகளின் செயற்பாடுகளினால்

# சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளன!

## புதிய இராணுவத்தளபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரசியல்வாதிகளின் செயற்பாடுகளினால் தற்போது பேச்சு வார்த்தைகளும், இராணுவத்தரப்பு-புலிகளின் சந்திப்புக்களும் தடைப்பட்டுள்ளதாகப் புதிதாகப் பதவியேற்ற இராணுவத்தளபதி சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார்.**

சனாதிபதியின் அனுமதி அல்லது பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறாமல் இராணுவத் தலைமைப்பீடங்கள் முன்னர் சில தீர்மானங்களை எடுத்துள்ளன. எதிர்காலத்தில் எனது தலைமையின் கீழ் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

தற்பொழுது கருணா எங்கு உள்ளார் என்பது எனக்கு சரிவரத் தெரியாது. கருணா சம்பந்தப்பட்ட பிரச்சினை சமாதான நடவடிக்கைகளை மிகவும் பாதிக்கும். மீண்டும் விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வுகளை ஏற்படுத்தி, சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பாடுபடப்போகின்றேன் என மேலும் அவர் கூறினார்.

மேல்மட்ட அதிகாரிகளின் செயற்பாடுகளினால் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் மோதல்கள் ஏற்பட்டால் நாட்டில் பாரிய அழிவுகள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## – யாழ். குருநகர்ப்பகுதியில் –
## வீதியால் சென்றவரைத் தாக்கிய ஈ.பி.டி.பி.யினர் மீது மக்கள் தாக்குதல்

யாழ். குருநகர்ப்பகுதியில் வீதியால் சென்றவரைத் தாக்கிய ஈ.பி.டி.பி.உறுப்பினர் இருவரை மக்கள் தாக்கியுள்ளனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்: நேற்று மாலை 2.30மணியளவில் குருநகர் சொலமன் வீதியால் ஈ.பி.டி.உறுப்பினர் றீகன் என்பவரும் அவரது உதவியாளரும் மோட்டார் சைக்கிளில் வந்து, துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த அப்பிரதேசவாசிகளான கெம்சி என்பவரையும், பிரபு என்பவரையும் மோட்டார் சைக்கிளால் தாக்கினர். அதனைத் தட்டிக்

(14 ஆம்பக்கம் பார்க்க)

## வர்த்தக நிலையத்தில் தீப்பற்றியது மட்டு.வாசி எரிந்து மரணம்

வெள்ளவத்தையில் வர்த்தக நிலையமொன்று தீப்பிடித்து எரிந்ததில் மட்டக்களப்புவாசி ஒருவர் எரியுண்டு மரணமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை நடைபெற்ற இந்தத் தீவிபத்தின்போது உயிரிழந்தவர் சம்மாந்துறை நிந்தாவூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடை எவ்வாறு தீப்பற்றியது என்பது கண்டுபிடிக்கப்படாத போதும் அரசாங்கப் பகுப்பாய் வாளர் மற்றும் மின்பொறியியலாளர்களின் உதவியுடன் தீ பரவியதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## மக்களால் வெறுக்கப்படுமிடங்களில் சிறில.பாராளுமன்றத்திற்கே முதலிடம்

### -சர்வதேச கணிப்பீடு தெரிவிப்பு

சிறிலங்காவில் பொது மக்களால் வெறுத்து ஒதுக்கப்படும் இடமாக பாராளுமன்றமே உள்ளது என சர்வதேச கணிப்பீடு ஒன்று தெரிவித் துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏஷியா பரோமீற்றர் ஆய்வு நிறுவனம் நடத்திய ஆய்வில் மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள் ளதாக அச் செய்தி கூறுகின்றது. சிறிலங்காவில் நகர்ப்புறங்களில் வாழும் மக்களிடையே மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பின் மூலம் 32.4 வீதமான மக்கள் பாராளு மன்றத்தின் நடவடிக்கைகள் பற்றி தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். அத்துடன் நாட்டின்சனநாயக நடவடிக்கைகளிலும் அவர்கள் அதிருப்தியடைந்துள்ளதுடன் தமது இளம் சந்ததியினர் அரசியலில் ஈடுபடுவதையும் பெரும்பாலானோர் விரும்பவில்லை எனவும் தெரியவருகிறது.

நாட்டில் நடைபெறும் அட்டூழியங்கள், வேலைவாய்ப்பின்மை, அரசியல் ஊழல் என்பவற்றால் மக்கள் அரசியலை வெறுப்பதுடன் பொலிஸ்திணைக்களம், மத்திய மாகாண ஆட்சிகள் தொடர்பில்

(14 ஆம்பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி -ஐ.தே.க வினரிடையே ஹிங்குறாங் கொடவில் மோதல்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியும், ஐக்கிய தேசியக்கட்சியும் ஹிங்குராங் கொடவில் மோதலில் ஈடுபட்டுள்ளன. ஹிங்குறாங் கொட நகரில் நேற்று மாலை மக்கள் விடுதலை முன்னணியினரின் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதே வேளை ஐக்கிய தேசியக்கட்சி விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணு மாறுகோரி நகரில் போராட்டமொன்றை நடத்தியுள்ளது.

(14 ஆம்பக்கம் பார்க்க)

## சுழற்சிமுறையில் பிரதமர் பதவி அடுத்த பிரதமராக அநுரா?

பிரதமர் பதவி சுழற்சிமுறைப்படி மாற்றும் திட்டம் ஒன்றினைக் கொண்டு வருவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு தீமானத்துள்ளது. இந்த முறையின் படி அநுரா பண்டாரநாயக்கவும்

ரத்னசிறி விக்கிரநாயக்காவும் பிரதமர் பதவிகளை அடுத்து வகிக்க உள்ளனர். இதன்படி தற்போதைய பிரதமரின் பதவிக்காலம் 90 நாட்களாகும். முன்னதாக அரசாங்கம் பதவியேற்று மூன்று மாதங்களுக்குள் 'சனாதிபதி முறையை மாற்றி அமை'பதற்கு அரசியல் யாப்பினை மாற்ற வதற்கு சனாதிபதி

(14 ஆம் பக்கம் பார்க்க)



படம்-லோகீசன்

முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற பெருவிளையாட்டுப்போட்டியில் மல்யுத்தப் போட்டியில் முதலிடம் பெற்ற வீரரைக் கேணல் சூசை கௌரவிக்கிறார்

## கருணாவுக்கு வழங்கும் ஒத்துழைப்பை சிங்களப் பேரினவாதிகள் நிறுத்த வேண்டும்

### அ.இ.தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமிழீழவிடுதலைப்புலிகளைப் பல வீனமடையச்செய்யும் நோக்குடன் சிங்களப் பேரினவாத அரசியல் வாதிகளால் துரோகி கருணாவிற்கு வழங்கப்பட்டுவரும் உதவிகளும், ஒத்துழைப்புகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இவ்வாறு அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் யாழ்ப்பாணத்திலுள்ள கட்சி செயலகத்தில் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திலேயே இதனை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## காலை தேசியக் கொடியேற்றலுடன் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் ஆரம்பம்

கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் இன்று காலை 9.00 மணிக்கு தேசியக்கொடியேற்றலுடன் எழுச்சியுடன் ஆரம்பமாகவுள்ளது. மாலை நிகழ்வுகள் 7.மணிக்கு இடம் பெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.


கரும்புலிகள் நினைவு இடங்களில் இன்று காலை 9.00 மணிக்குப் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியேற்றலை அடுத்து கரும்புலிகளின் திருவுருவப்படங்களுக்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்படும். தொடர்ந்து மலர்வணக்கம், அகவணக்கம்,நினைவுரைகள் என்பன இடம்பெறவுள்ளன.

அடுத்து மாலை நிகழ்வுகள் இரவு 7.00 மணிக்கு அகவணக்கத்துடன் ஆரம்பமாகி தலைமையுரை, நினைவுரைகளைத் தொடர்ந்து கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. புதுக்குடியிருப்புப் பிரதேச நகரப்பகுதியில் அமைந்துள்ள கரும்புலிகள்

(14 ஆம்பக்கம் பார்க்க)

# போரிலும், அரசியலிலும் சிறப்பிடத்தைப் பெற்றுள்ள புலிகள் விளையாட்டிலும் சிறப்பான சமூகத்தை உருவாக்குகிறார்கள்

## யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் மோகனதாஸ்



அம்பாறை முதல் யாழ்ப்பாணம்வரை எட்டு மாவட்டங்கள் இணைந்து கொண்ட ஒரு சிறப்புத் தேசிய நிகழ்வாக இந்த விளையாட்டுப் போட்டி அமைந்திருக்கிறது. அது மட்டுமல்ல இந்தப் போட்டிகளில் அனைத்து மாவட்டங்களுமே சிறப்புத் தேர்வு அடைந்திருப்பது. எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்துகிறது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் மோகனதாஸ் அவர்கள் தெரிவித்தார். நேற்று யாழ்ப்பாணம் பொது விளையாட்டு அரங்கில் நடைபெற்ற தமிழீழ தேசிய இளையோர் தடகளப் போட்டியின் பரிசளிப்பு விழா நிகழ்வில் சிறப்பு விருத்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; விளையாட்டு மனிதனின் தவிர்க்க முடியாத ஒரு அவசிய விடயமாகும். அடிப்படைத் தேவைகளில் ஒன்று என்று கூடச்சொல்லலாம் போரிலும்,அரசியலிலும் சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்ட விடுதலைப்புலிகள் விளையாட்டிலும் சிறப்பிடத்தைக் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்குகிறார்கள் என்பது பாராட்டுக்குரிய விடயமாகும் என்றார்.

நேற்றைய பரிசளிப்பு விழா நிகழ்விற்கு தமிழீழ விளையாட்டுத்துறையின் இணைப்பாளர் இன்பன் தலைமை தாங்கினார். பிரதமவிருத்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைகழக துணைவேந்தர் மோகனதாஸ், யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன், விமலராஜன் ,கிளிபாதர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த தடகளப்போட்டியின் சிறப்பு நிகழ்வாக முன்னாள் அகில இலங்கை தடகளப்போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்ற வைத்திலிங்கம் வாமதேவன் தமிழீழ விளையாட்டுத் துறையின் பொறுப்பாளர் பாப்பா அவர்களால் சிறப்புப் பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். கடந்த மே மாதம் நடைபெற்ற அகில இலங்கை தடகள விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற ஒன்பது பேருக்கும் தமிழீழ விளையாட்டுத்துறையால் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வைத்தொடர்ந்து நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்ற இளையோர் தடகள விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு நடைபெற்றது. இந்நிகழ்வில் அனைத்துப் போட்டிகளிலும் முதலாமிடத்தைப் பெற்றவர்களுக்கு தமிழீழ விளையாட்டுத்துறையின் பணப்பரிசில்களும், மாவட்ட ரீதியில் வெற்றிபெற்ற மாவட்டத்திற்கான வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன. இரண்டு நாட்கள்நடைபெற்ற அனைத்துப் போட்டிகளிலும் யாழ். மாவட்டம் முதலாமிடத்தினையும், திருகோணமலை மாவட்டம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது. இந்நிகழ்வின் இறுதியில் வானவேடிக்கையும் இடம்பெற்றது. (செ)

## கிளி.தொழில் நுட்பக்கல்லூரியை தரமுயர்த்துவது குறித்து ஆராய்வு

கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரியின் செயற்பாடுகளைப் பார்வையிட்டு, அதனை அரச தொழில் நுட்பக்கல்லூரியாகத் தரம் உயர்த்துவதற்க கவும், வன்னியில் தொழில் பயிற்சிகளை விருத்தி செய்வது தொடர்பாகவும், ஆராய்வதற்கென,அறிவு விருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில் நுட்பக்கல்வி அமைச்சின் செயலாளரும், மொறட்டுவ பல் கலைக் கழக துணை வேந்தரு மாகிய பேராசிரியர் தயானந்த எஸ்.விஜய சேகர மற்றும் அதிகாரிகள் கொண்ட குழு தொழில்நுட் பக்கல்லூரிக்கு விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளது. எதிர்காலத்தில் அரச சான்றிதழ்கள் வழங்குவது தொடர்பாகவும்,அரச தொழில்நுட் பக்கல்லூரிஅமைப்பது தொடர்பாகவும்இவர்கள் அதிபரு டன் ஆராய்ந்துள்ளனர்.


**OBTEC**
**Computer Academy**

OBLATE SCHOOL OF COMPUTING AND LINGUISTICS
NO.73, KANAKAPURAM, KILINOCHCHI, SRILANKA

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

**15.07.2004இல் புதிய வகுப்புக்கள்ஆரம்பமாக இருப்பதால் எமது நிறுவனத்தில் 05.07.2004இல் இருந்து விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.**

**விண்ணப்ப முடிவுத்திகதி:-14.06.2004**

பாடநெறி:-(M.S.OFFICE)

01.M.S.word
02..M.S.Excel
03..M.S.Power Point
04.Photo Editer
05.Windows 98-XP
06.Internet with E.mail

மேலதிகபாடநெறி:-(Graphic designing)

01. Photo shop
02.Corel Draw
03.Phoo Express
04.Scaning
05.Newro (CD Writing)

***(Free Subject-inernet with E.mail)***

சிறுவர்களுக்கான பாடநெறி:-

01.M.S.word
02.M.S.Power Point
03.M.S.Paint
04.GAME

(4629)


## முன்பள்ளி விளையாட்டு

கடந்த 28.06.2004 திங்கட் கிழமை முழங்காவில் மாவீரர் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவுடன் முன்பள்ளி மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இதனையடுத்து 29ஆம் திகதி சுதந்திரபுரம் அன்னைபூபதி முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழாவினை சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனமும் பெற்றோரும் இணைந்து நிகழ்த்தியுள்ளதுடன் 30ஆம் திகதி உடையார்கட்டு வசீகரன் சிறுவர் கல்வி போசாக்கு மேம்பாட்டு பூங்காவின் விளையாட்டு விழா திருமதி யூட் தலைமையில் பூங்காவின் மைதானத்தில் நடைபெற்றது. (19)



## வரிவிளம்பரம்

**வேந்தன் பல்கட்டும் நிலையம்**

சொந்தப் பற்களுக்கு நிகரான சங்குப்பற்களைக் கட்டுவதற்கும்; சிறந்த முறையில் தயாரான சாதாரண பற்களைக் கட்டுவதற்கும், மிதப்புப் பற்களுக்கு சிறந்த முறையில் "கிளிப்" போடுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம், வேந்தன் பல்கட்டும் நிலையம். மத்திய கல்லூரி மைதானம் முன்பாக ஏ-9 சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சி.(சி- 9837)

**வழிபாட்டுத்தலங்கள் மீள்குடியேற்றத்தை ஊக்குவிப்போம்**

வெள்ளிக்கிழமைகள் தோறும் விரத வழிபாடுகள் மூலம் நிலையான அமைதி வேண்டி பிரார்த்திப்போம். இந்து சமய ஊழியர்கள் இணையம். (4775)

யாழ் குடாநாட்டில் பவனிவரும் கப்பல் வடிவிலான கரும்புலிகளின் திருவுருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி
(படம்.செல்வா)

## மல்லாவிப் பிரதேசத்தில் கரும்புலிகள் ஊர்தி பவனி

முல்லைத்தீவில் இருந்து 261 கரும்புலிகளின் திருவுருவப் படங்களை தாங்கிய ஊர்தி மக்களின் அஞ்சலிக்காக பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேசம் வந்த டைந்தது. மக்கள் அஞ்சலி செலுத் தும் முகமாக நேற்று காலை 9.30 மணிக்கு பாலிநகர் மாவீரர் மண்டபத்தில் பாண்டியன்குள பிரதேச அரசியல் துறைபொறுப்பாளர் கண்ணமுதன் தலைமையில் ஆரம்ப நிகழ்வுகள் இடம் பெற்றன. மேற்படி நிகழ்வின் பொதுச்சுடரினை பாலிநகர் ஊரவை தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ஜீவகுமார் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை அரசியல்துறை போராளி வேங்கைமாறன் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரினை ஐடியல் கல்வி நிலைய ஆசிரியர் சசிக்குமார் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து மலர்வணக்கம்,அகவணக்கம் செலுத்தி வர்த்தக சங்க உறுப்பினர்கள் பணியாளர்கள் தேசிய ஊரக வளர்ச்சி உறுப்பினர்கள் கல்வி நிலைய மாணவர்கள், பொது மக்கள் என பலரும் கரும்புலிகளிக்கு அஞ்சலி செலுத்தினர். பாலிநகரில் இருந்து ஆரம்பித்த ஊர்தியின் பவனி கொல்லவிளாங்குளம் பகுதியூடாக நகர்ந்துவர மல்லாவி 1ஆம் யூனிற் பகுதியில் இருந்து துணுக்காய் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் கே.புனிதன் தலைமையில் பொறுப்பேற்றவுடன் மல்லாவிக்கு நகர்ந்து தொடர்ந்து துணுக்காய் கல்விளான் போன்ற கிராமங்களிற்கு பிற்பகல் 05.00 மணிக்கு சென்றடைந்தது. (21)

## 07—ஆம் திகதியுடன் பிரச்சாரம் முடிவு

மாகாணசபைத தேர்தலுக்கான பிரச்சாரங்கள் யூலை 07 ஆம் திகதி இரவு 12 மணியுடன் முடிவடைவதாகத் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். எதிர் வரும் 10 ஆம் திகதி தேர்தல் மத்திய மேல் சப்பிரகமுவ,தென் ஊவா, வடமத்திய மாகாணங்களில் நடைபெற்று, 316 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர். இத்தேர்தலில் 4254 வேட்பளர்கள் போட்டியிடுகிறார்கள்.வாக்கு எண்ணும் வேளையில் காவல் துறை இராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கிளிநொச்சி நகரப்பகுதியில் கரும்புலிகள் நிகழ்வு

கரும்புலிகள் நாள் விசேட நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் பொதுவிளையாட்டு மைதானம் முன்பாக அமைக்கப்பட்ட நினைவுப்பந்தலில் தமிழீழ மாவீரர், போராளிகள் குடும்பநலன் காப்பகத்தினரை சேர்ந்த விஜிகரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட காப்பக பொறுப்பாளர் முத்து அவர்களும், சமுதாய முன்னேற்ற நிலைய மகளிர் வேலைத்திட்டப் பகுதிப்பொறுப்பாளர் அம்மணி அவர்களும் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடி யினை தமிழீழ மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகத்தின் துணைப் பொறுப்பாளர் பரஞ்சோதி ஏற்றி வைத்தார். கரும்புலிகள் பொதுப் படத்திற்கான ஈகச்சுடரினை கரும்புலி மாவீரர் லெப்.கலைச் செல்வனின் பெற்றோர்களான ஆறுமுகம் பெரியக்கா ஆகியோர் ஏற்றினர். தொடர்ந்து கரும்புலிகள் நினை வுரையினை தொழில்நுட்பப் பிரிவினைச்சேர்ந்த பிரபா ஆற்றினார். அதனைத் தொடர்ந்து சிறப்புரையினை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் ஆற்றினார்.

## பேருந்து சேவை நிறுத்தத்தால் பக்தர்கள் அசௌகரியம்

(அலுவலக செய்தியாளர்)

மன்னார் உயிலங்குளம் இராணுவச் சோதனைச்சாவடிக்கும் காக்காகுளம் சோதனைச்சாவடிக்குமிடையில் நடைபெற்று வந்த அரச பேருந்து சேவை கடந்த 02ஆம் திகதியன்று நடைபெறாமையின் காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்ளவேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

அன்றைய தினம் மடுமாதா ஆலய திருவிழாவிற்கு பெருந்திரளான மக்கள் கலந்து கொள்ள வந்திருந்த பொழுதும் அரச பேருந்து சேவை இன்மை காரணமாக பக்தர்கள் 03 கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்லவேண்டிய நிலைக்கு ஆள்கியதாகவும் தெரியவந்துள்ளது.

இப்பகுதியில் அரச பேருந்து தினமும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த பொழுதிலும் அது பழுதடைந்த நிலையில் மற்றொரு பேருந்தினை சேவையில் ஈடுபடுத்தாமையின் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதென ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்கள் தெரிவித்துள்ளனர். (சோ)

# ஈராக்கிய தீவிரவாதிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்க கடற்படைச் சிப்பாய் கொல்லப்பட்டார்

### இணையத்தளங்கள் உறுதிப்படுத்தின

**ஈராக்கிய தீவிரவாதிகளால் கடத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்கக் கடற்படைச் சிப்பாய் ஒருவரை தீவிரவாதக் குழுவினர் கொலை செய்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

இரண்டு இணையத்தளங்கள் மூலம் ஈராக்கிய தீவிரவாதக் குழுவினர் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

லெபனான் பிரஜையான அமெரிக்கக் கடற்படைவீரர் அலிகுசனை தாங்கள் கொலைசெய்துள்ளதாகவும் மற்றுமொருவரை பணயக் கைதியாக தடுத்துவைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட இரண்டாவது நபர் அலி குசன் ஆவார். இந்த விடயம் தொடர்பாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்சிற்கு முகவரியிடப்பட்ட அரபு மொழியில் அமைந்த செய்தியின் உண்மைத் தன்மை பற்றி எந்த விதக் கருத்தையும் வெளியிட முடியாது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

. ஈராக்கின் நிர்வாகம் கடந்த மாதம் 28ஆம் திகதி ஈராக்கியரிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் ஈராக்கில் இறைவரிச்சட்டம் நடைமுறைக்கு இடப்படும்வரை அமெரிக்கர்களுக்கும், வெளிநாட்டு படையினருக்குப் எதிரான தாக்குதல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமென்றும் தீவிரவாதிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.



நெய்போர் லூயிஸ் கார்சியா தனது பிள்ளைகளான மத்திற, ஹன்னா ஆகியோருடன் ஈராக்கில் தலை துண்டித்துக்கொலை செய்யப்பட்ட அமெரிக்கக் கடற்படை கோப்ரல் வாஸேவ் அலிஹசனின் உறவினர் வீட்டில் பூக்கள் தூவி வணங்கிவிட்டு திரும்புகின்றார். யூலை – 03இல் மேற்கு ஜோர்தானில் இது நடந்தது.

# பக்ரேனில் நடைபெறுவதாக இருந்த அமெரிக்க சுதந்திர தினக் கொண்டாட்டம் ரத்து

பக்ரேனில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அமெரிக்க சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பக்ரேனில் உள்ள அமெரிக்கப் பிரஜைகள் அனைவரும் இயன்றளவு விரைவில் அந்நாட்டை விட்டு வெளியேறி தாயகம் திரும்புமாறு கோரப்பட்டுள்ள நிலையில் மேற்படி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் றொனால்ட் ரம்ஸ்பீல்ட் தகவல் தெரிவிக்கையில் இது ஒரு தற்காலிக நடவடிக்கை என்றும், 30நாட்களுக்கு இந்த விடயம் நீடிக்கும் எனவும் தெரிவித்தார். இதேவேளை பக்ரேன் அதிகாரிகள் அங்கு வாழும் அமெரிக்க மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதால் பக்ரேனை விட்டு வெளியேறவேண்டாம் என்று கேட்டுள்ளனர்.

# சதாம் ஹூசைனுக்கு எதிரான குற்றப்பிரேரணை பாக்தாத், நீதிமன்றில் ஈரான் சமர்ப்பிக்கும்

(தெஹ்ரான்)

ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம்ஹுஸைனை விசாரணை செய்கின்ற பாக்தாத் நீதிமன்றத்தில் அவருக்கு எதிரான குற்றப்பிரேரணை ஒன்றை தாக்கல் செய்யப் போவதாக ஈரான் நேற்று அறிவித்துள்ளது.

சதாம் சனாதிபதியாக இருந்த வேளை எமது அயல்நாட்டின்மீது யுத்தம் புரிந்தாக கடந்த வியாழக் கிழமை சதாம் நீதிமன்றில் ஆஜரான வேளை அவர் மூன்று தசாப்த காலங்களில் 07 குற்றச் செயல்களை மேற்கொண்டதாக தெரிவித்து மனு தாக்கல் செய்யபட்ட போதிலும் ஈரானுக்கு எதிராக 1980 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டு வரை நடை பெற்ற யுத்தம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என தெரிவித்துள்ளது.

இதேவேளை ஈரானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் எமது நாட்டிற்கு எதிராக சதாம் இழைத்த குற்றங்கள் பற்றி நீதிமன்றில் விசாரிக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

# பூலான்தேவி கொலை சந்தேக நபர் நேற்று பொலிசாரிடம் பிடிபட்டார்

பூலான் தேவி கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த சந்தேக நபரை பீகாரில் ஜகனாபாத் மாவட்டத்தில் பொலிசார் நேற்று கைது செய்துள்ளனர். பாரர்ளுமன்ற அமைச்சரும் சாம்பல் பள்ளத்தாக்கின் முன்னாள் கொள்ளைக்காரியுமான பூலான் தேவி கடந்த 2001 இல் டில்லியில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபரான ப்பிவீண்குமார் புதுடில்லி கொண்டுவரப்பட்டதால் விசாரணைகளை பொலிசார் ஆரம்பித்துள்ளனர்.



வெள்ளப்பெருக்கினால் ஒசொர்னோ அருகே டாமா நதிநீளத்திற்கு வீடுகள் ஆதரவின்றிக் கிடக்கின்றன. தெற்கு சிலியில் இவ்வாரம் ஏற்பட்ட வெள்ள மற்றும் புயலினால் நால்வர் உயிரிழந்தும் ௨000 வீடுகள் சேதமடைந்தும் இருந்தன.





உலக வர்த்தக அமைப்புடன் இணைவதற்கு பாரிய முயற்சிகள் எடுக்கப்படும் என வியட்நாம் உறுதியளித்ததையடுத்து ஹனோயிலுள்ள இலத்திரனியல் கருவிக் களஞ்சியம் ஒன்றின் ஊழியர்கள் மகிழ்ச்சி நிலையில் காணப்படுகின்றனர்.

# 700 கிலோமீற்றர் தூர இலக்கைத் தாக்கும் புதிய "அக்கினி" ஏவுகணை வெற்றிகரமாகப் பரீட்சிப்பு

### அணுவாயுதங்களை ஏந்திச் செல்லும்

அணுவாயுதங்களை ஏந்திச் சென்று 700 கிலோமீற்றர் இலக்கைத் தாக்கும் புதிய குறுந்தூர அக்கினி ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக நேற்றுப் பரீட்சித்துள்ளது.

இந்தியாவின் பாதுகாப்பிற்காக அக்கினி ரக ஏவுகணைப் பரிசோதனையை அது அவ்வப்போது பரீட்சித்து வருகின்றது. அந்த வகையில் தரையில் இருந்து 700 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மற்றொரு இலக்கை அணுவாயுதங்களை ஏந்திச் சென்று தாக்கக் கூடிய குறுந்தூர ஏவுகணையையே நேற்றுப் பரீட்சித்துப் பார்த்துள்ளது.

ஒரிஷா மாநிலத்தில் பாலாசூரில் இந்த ஏவுகணைப் பரீட்சிப்பு நடத்தப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

கடந்த 2002 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதன் முதலாக இந்தியாவில் அக்கினி ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மதக் கலவரங்களை தடுக்க புதிய சட்டம்கொண்டு வரப்படும்

### உள் துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல்

நாட்டில் மதக்கலவரங்களைத் தடுக்கப் புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் நேற்று அறிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், குஜராத் கலவரத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தேவையான. உதவிகள் அனைத்தையும் மத்தியரசு வழங்கும் என்றும்,

எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாது தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மதக்கலவரங்களைத் தடுக்க புதிய சட்டம் ஒன்று கொண்டு வரப்படும் என்றும், இது பற்றி மத்தியரசு பரிசீலித்து வருவதாகவும் கூறியுள்ளார்.

மதக்கலவரங்களின் போது மத்திய மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த அம்சங்களும் இந்தச் சட்டத்தில் இடம் பெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# நாஸாவின் "காசினி" விண்கலம் சனிக்கிரகத்தின் சுற்றுப் பாதையை அடைந்தது

### சாதனை படைத்தது நாஸா

சனிக்கிரகம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அனுப்பப்பட்ட நாஸாவின் காசினி விண்கலம் கடந்த புதன் கிழமை சனிக்கிரகத்தின் இரு வளையங்களையும் ஊடுருவி அதன் சுற்றுப் பாதையினை சென்றடைந்துள்ளது.

1997 இல் கென்னடி விண்வெளி நிலையத்திலிருந்து ஏவப்பட்ட காசினி விண்கலம் ஏழு வருட பயணத்தின் பின்னர் தற்போது சனிக்கிரகத்தை அடைந்துள்ளது.

இவ் ஆய்வுக்கலம் அடுத்த நான்கு வருடங்கள் அங்கு தங்கியிருந்து சனிக்கிரகங்கள் தொடர்பாகவும், அதன் வளையங்கள் தொடர்பாகவும் சனிக்கிரகத்தில் அறியப்பட்டுள்ள 31 சந்திரன்களில் சிலவற்றையும் ஆராயவுள்ளது. இந்தச் சந்திரன்களில் பெரிதான டைட்டன் குறித்தே அதிகளவு ஆய்வினை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 2.2 மில்லியன் மைல் தூரத்தை 7 வருடங்கள் பயணம் செய்து கடந்துள்ள காசினி ஆய்வுக்கலம் வெற்றிகரமாக சனிக்கிரகத்தின் சுற்றுப் பாதையை அடைந்தமை நாஸாவிற்கு பெரும் சாதனையாக அமைந்துள்ளது.

அத்துடன் இந்த காசினி விண்கலம் சந்திர மண்டலம் சம்பந்தமான பல படங்களை பூமிக்கு அனுப்பி வைத்துள்ளது. இது பற்றி விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கையில் தங்களுக்குக் கிடைத்த படங்களுக்குள் இவையே சிறந்தவை என்றும் இப்படத்தினை வைத்து மேலும் பல ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார். இக் காசினி விண்கல ஆய்வுத் திட்டத்தில் 17 நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் பலர் தமது பணிக்காலம் முழுவதையும் காசினி ஆய்வுத் திட்டத்திலேயே செலவிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேலிய துருப்பினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ப லஸ்தீன சிறுவனான 09வயதுடைய இஹாப் சகாத்தின் தந்தையான அப்துல் கரீம் சகாத் தனது மகனின் இறுதிச் சடங்கில் அழுது புலம்பும் சோகக் காட்சி.

# கரும்புலிகளின் ஒப்பற்ற தியாகத்தால் தமிழினம் இன்று நிமிர்ந்து நிற்கிறது

-நினைவாலயம் திறப்பில் பா.உறுப்பினர் ச.கனகரத்தினம்

(அலுவலகசெய்தியாளர்)

**தமிழ் இனத்தின் விடுதலைக்காய் தம் உயிரை ஆயுதமாக்கி எதிரியை அழித்த உத்தம வீரர்கள் கரும்புலிகள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் மாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள கரும்புலி லெப்.கேணல் போர்க்கின் உருவச் சிலைக்கு அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கரும்புலிகள் நினைவு மண்டபத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து உரைநிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கரும்புலிகளின் தியாகம் அற்புதமானது எவராலும் அளவிட முடியாத உயர்ந்த தியாகத்தின் வடிவமே கரும்புலிகளின் வடிவம் தமிழினத்தின் விடுதலைக்காக அச்சமற்ற சுதந்திரமான வாழ்விற்காக எந்நேரமும் தமது உயிரை ஆயுதமாக்கி கடலிலும், தரையிலும் எதிரியைச் சாய்த்து வீழ்த்துகிறார்கள். எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மைத் தன்மையை உலகம் அறிந்து கொள்வதற்கு வழி சமைத்தவர்களும் கரும்புலிகள் தான்.

இவர்களின் ஒப்பற்ற தியாகத்தால் தான் இன்று தமிழினத்தின் கௌரவம் உலக அரங்கிலே நிலைநாட்டப்பட்டிருக்கிறது. கரும்புலி கப்டன் மில்லர் வெடி குண்டோடு சென்று, எதிரித்தளத் தில் வெடித்து, உருவாக்கத்தை உலகிற்கு பறை சாற்றினான். அன்றிலிருந்து இன்றுவரை மில்லரின் பாதையில் பெருமளவான கரும்புலிகள் தமது உடலில் வெடிகுண்டுகளைத் தாங்கிச் சென்று எதிரித் தளத்திலும், எதிரிக் கப்பல்களுடனும் மோதி எதிரியை அழித்து எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு உரம் ஊட்டியுள்ளனர்.

எனவே இந்தப் புனிதர்களை நினைவு கூருகின்ற நன்நாளிலே நாம் அனைவரும் இதய சுத்தியுடன் எமது தாயக விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காக உறுதியுடன் உழைப்போம் என்று உறுதி கொள்ளவேண்டும். இன்று ஒரு சமாதானச் சூழல் உருவாகி இருக்கிறது. இந்தச் சமாதானம் எமது உரிமைப் போராட்டத்திற்கான ஒரு சரியான நிரந்தரத் தீர்வை தந்து விடப்போவதில்லை. இதற்கு சிங்களப் பேரினவாத சக்திகள் தயாராக இல்லை. அவர்கள் தமிழர்கள் மீது வெறுப்பையே காட்டி வருகின்றார்கள். எனவே தமிழர்கள் ஆகிய நாம் இந்த வீரமறவர்களின் தியாகப் பாதையில் எம்மையும் சேர்த்து உறுதியுடன் அவர்களின் தடம் பற்றி தொடர வேண்டும். அதுவே எமது இனத்திற்கான விடுதலையைப் பெற்றுத்தருவதற்கான வழி எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ,ச)

## சிரமதானம்

(அலுவலகசெய்தியாளர்)

புளியங்குளம் பேருந்து நிலையம் சிரமதானப் பணி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சிரமதானப் பணியினை புளியங்குளம் சோதனைச் சாவடியில் கடமை புரியும் ஊழியர்கள் மேற்கொண்டனர். இதன் மூலம் பேருந்து நிலையம் அதன் அயல்ப்பகுதி என்பனவற்றில் உள்ள பற்றைகள் அகற்றப்பட்டுள்ளன. (கு)




கரும்புலிகள் நாளை முன்னிட்டு மன்னார் நகரப்பகுதியில் கரும்புலிகளின் திருவுருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி மக்களின் வணக்கத்திற்காக பவனிவருவதைப் படத்தில் காணலாம்.

(படம் -மிராண்டா)

## 600 சுகாதார ஊழியர்களை நியமிக்க உடன் நடவடிக்கை

–மாகாண சுகாதார திணைக்களம் தகவல்

(திருமலை)

வடகிழக்கு அரசாங்க வைத்தியசாலைகளில் உடனடியாக கடமையாற்றுவதற்கு 600 சுகாதார ஊழியர்களை நியமிக்கவுள்ளதாக வடகிழக்கு சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது. 300 தாதிமார்கள் ஒன்றரை வருடங்கள் குடும்ப சுகாதார பயிற்சித்திட்டத்தில் ஈடுபடுத்தப்படுவதுடன், இதில் 200 தமிழ்த் தாதிமார்களும், 100 சிங்கள தாதிமார்களும் உடனடிப் பயிற்சித்திட்டம் வழங்கி இவர்களுக்கு கிராமங்களில் கடமை புரிவதற்கு வழிவகுக்கப்படும் என வடகிழக்கு சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

## கரும்புலிகள் நாளை சிறப்பிக்க பல்வேறு பகுதிகளிலும் ஏற்பாடு

இன்று கரும்புலிகள் நாளை முன்னிட்டு பரவலாக எங்கும் அதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வீதிகளில் வளைவுகள், பந்தல்கள், வீதி அலங்காரங்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சிரமதானப் பணிகளும் பரலவாக நடந்து முடிந்துள்ளன.

புதுக்குடியிருப்பில் பரவலாக எங்கும் கரும்புலிகள் நாள் ஏற்பாட்டு வேலைகள் இடம்பெற்றுள்ளன.

இதேபோல் உடையார்கட்டில் தேசிய எழுச்சிப் பேரவை ஏற்பாட்டில் கரும்புலிகள் நாளை முன்னிட்டு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

மல்லாவியிலும் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் நடைபெறுகின்றது.

வட்டக்கச்சிப் பகுதியிலும் கரும்புலிகள் நாள் அரசியல் துறையின் ஒழுங்கு படுத்தலில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதேவேளை கரும்புலிகள் நாளை முன்னிட்டு சிரமதானப் பணிகளும் நடந்துள்ளன.

உடையார்கட்டு மகாவித்தியாலயம், பிரதானவீதிகள், விசுவமடு தேராவில், மாலதி அறிவாலயம், மதுஷா முன்பள்ளி ஏன்பனவும், புதுக்குடியிருப்பில் கரும்புலிகள் நினைவாலய சுற்றாடல், மாவீரர் நினைவு மண்டபம், வேணாவில் முன்பள்ளி, சுதந்திரபுரம் அன்னை பூபதி மண்டபம் குரவில் பாடசாலைப்பகுதிகள் என்பனவும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. இதேபோல் துணுக்காயில் துணுக்காய் அ.த.க பாடசாலையும், பாண்டியன்குளம் பிரதேசத்தில் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லமும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. வட்டக்கச்சி பகுதியிலும் பிரதான வீதிகள், பொதுஇடங்கள், மாவீரர் மண்டபம், மயானம், போன்ற இடங்களில் சிரமதானப் பணி நடைபெற்றுள்ளது. (08,24,19,12)

## தமிழ் அகதிகளை ஏற்றி வந்த படகோட்டிகளுக்கு விளக்கமறியல்

(மன்னார்)

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய 29 அகதிகளை ஏற்றி வந்த 04 படகோட்டிகளை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட பதில் நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தலைமன்னாரில் வைத்து கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டமை தெரிந்ததே.

நேற்று நீதவான் முன்நிலையில் இவர்களை ஆஜர் செய்த வேளை மன்னார் பேசாலையைச் சேர்ந்த 04 படகோட்டிகளையும் தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் 29 அதிகாரிகளையும் அவர்களது சொந்த இடத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தர விட்டுள்ளார். (மி)

### கால்வாய் நோய்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கால் நடைகளுக்கு கால்வாய் நோய் பரவியுள்ளது. இதுபற்றி தெரிய வருகையில்; இப்பிரதேசத்தில் உள்ள சம்புக்குளம் மாயவனூர் பகுதிகளில் கால் நடைகளுக்கு கால்வாய் நோய் பரவிவருவதாக பண்ணையாளர்கள் மிகவும் கவலை தெரிவிக்கின்றனர். இந்நிலையில் கால்வாய் நோயைத் தடுக்கும் வழிவகைகளைக் கைக்கொள்ளும் இடத்து இதனைக் கட்டுப்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

## சுயதொழில் மேம்பாட்டிற்கென 24 பயனாளிகளுக்கு கடனுதவி

பாரதிபுரம் கிராம சேவையாளர் பிரிவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிக்கொட் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சமூக அபிவிருத்தித்திட்டத்தின் ஓர் அங்கமான வருமான அதிகரிப்புத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 101 பயனாளிகளில் சிறுவியாபாரம் , மீன்வியாபாரம், மட்பாண்ட உற்பத்தி என்பவற்றுக்கென 24பேருக்கு அவர்களின் தொழில் மேம்பாட்டினை ஊக்கப்படுத்தும் முகமாக கடந்த புதன்கிழமை முதற்கட்டமாக தலா 15,000 ரூபாய் வீதம் கடன் வழங்கப்பட்டது.

பாரதிபுரம் கிராம பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தலைவர் பொ.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழவுகளைத் தொடர்ந்து விருந்தினர் உரையினை பாரதிபுரம் கிராமசேவையாளர் வைரவநாதன் நிக்கொட் திட்டசமூக இணைப்பாளர் சிறிதரன், கரைச்சிப் பிரதேச செயலாளர் பொன். நித்தியானந்தம், தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் வ.றீகன், தமிழர் புனர்வாழ்வு கழகத் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ்திலகர் ஆகியோர் நிகழ்தினர்.



கரைச்சிப் பிரதேச செயலர் தமது உரையில் இக்கிராமம் இன்னும் சில வருடங்களில் நகரமயமாக்கலுக்கு உட்படும் என்பதால் அதற்கேற்ப மக்களின் வாழ்க்கைத்தரமும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். தொடர்ந்து பயனாளிகளுக்கான கடன் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. மேலும் நிக்கொட் திட்டத்தினால் இக்கிராமத்தில் வீதி புனரமைப்பு, குழுக்களுக்கான வலுவூட்டல் பயிற்சி வகுப்புகள், பொது மண்டபம் அமைத்தல், குடிநீர் வசதியை ஏற்படுத்தல் ஆகிய திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## துணுக்காய் வலய முன்பள்ளி சிறார்களின் திறனாய்வு நிகழ்வு



(மல்லாவி)

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஒழுங்கமைப்புக்களுடன் துணுக்காய் வலயத்திற்குட்பட்ட முன்பள்ளிகளின் சிறார்களது திறனாய்வு விளையாட்டுப்போட்டி விழா நிகழ்வு கடந்த வியாழன் அன்று பிற்பகல் 2.30 மணிக்கு அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் பாண்டியன் குளம் பிரதேச சமூக மேம்பாட்டு இணைப்பாளர் க.சிவா தலைமையில் இடம் பெற்றது. ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது. அடுத்து மாணவர்கள் சத்தியப் பிரமாணம் செய்தார்கள். தொடர்ந்து வரவேற்புரையினைத் துணுக்காய் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் செல்வி இ.பிரபாகிரி நிகழ்த்தினார். ஆசியுரையை துணுக்காய்ப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் திருமதி ப.தியாகராஜா வழங்கினார். முன்பள்ளிகளின் சிறார்களது இசையும், அசைவும் இடம் பெற்றது. கருத்துரைகளை வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் த.கணேசலிங்கம், துணுக்காய் பாண்டியன் குளம் தமிழர் புனர்வாழ்வுக்கழக வலய இணைப்பாளர் மு.மூர்த்தி ஆகியோர் வழங்க, சிறப்புரையை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.முகுந்தன் ஆற்றினார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பிரதம விருந் தினர்களால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (24)


# எமது இனம் சிரித்து வாழவேண்டும் என்பதற்காகவே உலகியல் இன்பங்களை துறந்தவர்கள் கரும்புலிகள்

## இளையோர் விளையாட்டு விழா ஆரம்பநிகழ்வில் கி.பாப்பா உரை

(யாழ்ப்பாணம்)

**தாயகப் பிரதேசவிளையாட்டு வீரர்களுக்கிடையேயான தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தும் நோக்கிலேயே தமிழீழ விளையாட்டுத்துறை தமிழ்த்தேசிய மட்டத்திலான இளையோர் தடகளப்போட்டிகளை ஏற்பாடு செய்திருக்கிறது.**

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்.விளையாட்டரங்கில்



இடம்பெற்ற முதலாவது தமிழீழ இளையோர் தேசிய தடகளப் போட்டி ஆரம்பவிழாவில் கலந்துகொண்டு தொடக்க உரையை வழங்கிய தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தெரிவித்துள்ளார்.

எமது இனம் சிரித்து வாழ வேண்டும் என்பதற்காக தமது உலகியல் இன்பங்களைத் துறந்து தம்மையே வெடியாக்கி மறைந்த கரும்புலிகளின் நினைவாக தமிழீழத் தேசிய இளையோர் தடகளப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.

தமிழினம் தன்னைத்தானே ஆளவேண்டும் என்பதற்காக தமது உயிர்களையே ஆகுதியாக்கிய கரும்புலிகளின் நினைவாக ஆரம்பிக்கப்பட்டுள்ள போட்டியில் தாயக பிரதேசங்களில் வாழும் வீரவீராங்கனைகள் பங்குகொள்வதன் மூலம் இவர்களின் தேசிய உணர்வுகள் வலுப்பெறும் என்பது எமது தலைவரின் எதிர்பார்ப்பு. அத்துடன விளையாட்டுத் துறையில் எமது தேசம் தணித்துவமானதாக .மாறி எமது வீரர்களும் சர்வதேச மட்டச் சாதனையாளர்களாக மாறவேண்டும் என்பதுவே எமது தேசியத் தலைவரின் ஆவலாக உள்ளது. எனவே தலைவரின் சிந்தனைக்கு அமைவாக எமது தேசியத்தின் வலிமையை மனதில் கொண்டு தமிழீழ விளையாட்டு வீரர்கள் உலக சாதனையாளர்களாக மாறுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (33)

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் கல்வி வலயத்தில் கடமையாற்றுவதற்கு ஆரம்பக்கல்வி மற்றும் சமூகக் கல்வி ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 அல்லது தரம்1,2 இனைப் பூர்த்தி செய்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்தரத்தைச் சேர்ந்தவர்களும் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் வலிகாமம் வலயக்கல்விப் பணிமனைக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (33)

# நேர்முகத் தேர்வில் தோற்றத் தவறிய பட்டதாரிகளுக்கு சந்தர்ப்பம்!

அரசதுறைகளில் வேலை வாய்ப்பினை வழங்குவதற்காக நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வில் தோற்ற முடியாது போன பட்டதாரிகளுக்கு மீள ஒரு தடவை நேர்முகத் தேர்வை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவத்றகாக கடந்த மாதம் பிரதேச செயலர் ரீதியாக நேர்முகத்தேர்வுகள் நடத்தப்பட்டன. எனினும் பல்கலைக்கழக இறுதி ஆண்டுப் பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரங்களைப் பெறாத ஏராளமானோர் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றவில்லை.

இதனால் பாதிக்கப்பட்டவர்களின் நலனைக் கருத்திற கொண்டு நேர்முகத்தேர்வுக்குத் தோற்றாதவர்களுக்கு மீண்டும் ஒரு தடவை நேர்முகத்தேர்வு நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (33)

# யாழ்ப்பாணம் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை அபிவிருத்திப் பணிக்கு "நிக்கொட்" 10 இலட்சம் ரூபா அன்பளிப்பு

யாழ்.தெல்லிப்பளை புற்று நோய் வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்கென நிக்கொட் நிறுவனத்தால் 10 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் சேதமடைந்த நிலையில் தெல்லிப்பளை பாதுகாப்பு வலயத்தினுள் காணப்படும் மேற்படி வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்கென நிக்கொட் நிறுவனத்தால் ஒதுக் கப்பட்ட இந்நிதியிலிருந்து நோயாளர் விடுதிகள் புனரமைக்கப்படவுள்ளதுடன் தளபாடவசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

இதேவேளை கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் சேதமடைந்த நிலையில் தெல்லிப்பளையில் உள்ள இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்துள் கடந்த 14 வருடங்களாக முடக்கி வைக்கப்பட்டுள்ள மேற்படி வைத்தியசாலையை யாழ் மாவட்ட புற்று நோயாளர் நலன் கருதி மீள இயக்குவதற்கான நடவடிக்கைகளை வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவையினர் மேற்கொண்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (33)

# குடாநாட்டில் 'எயிட்ஸ்' விழிப்புணர்வு; 'யுனிசெவ்' நடவடிக்கை

யாழ்.குடாநாட்டு மக்களிடையேயான எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் முயற்சியில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஈடுபட்டு வருகிறது.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் தவறான பாலியல் பழக்க வழக்கங்கள் அதிகரித்து வருகின்றமைஅவதானிக்கப்பட்டே இவ்வாறான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் முயற்சியில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஈடுபட்டுள்ளது. இதற்காக இந்நிறுவனத்தினரால் கிராமங்களிலும், பாடசாலை மட்டங்களிலும் பாலியல் மற்றும் எயிட்ஸ்சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுவருகின்றன. (33)

# கடந்தகால இராணுவ நடவடிக்கையில் சாவகச்சேரியில் 23சனசமூக நிலையங்கள் செயலிழந்தன

(சாவகச்சேரி)

யாழ். சாவகச்சேரிப் பிரதேசத்திலுள்ள 23 சனசமூகநிலையங்கள் கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் சேதமடைந்து இயங்க முடியாத நிலையில் இருக்கிறது.

அந்தவகையில் சாவகச்சேரி பிரதேசத்தில் இயங்கிவந்த 83 சனசமூகநிலையங்களில் 42 சனசமூகநிலையங்கள் கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் சேதமடைந்திருக்கின்ற போதும் இவற்றில் 19சனசமூக நிலையங்கள் கடந்தசிலமாதமாக இயங்கி வருகின்றன. ஏனைய 23சனசமூகநிலையங்களும் முற்றாகசெயலிழந்து போயிருப்பதாக தெரியவருகிறது. இதன்காரணமாக சனசமூக நிலையங்களூடாக மேற்கொள்ளப்பட்டு வரும் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உரியமுறையில் இங்கு அமுல்படுத்த முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். (33)

# யாழ். பிரதேச செயலக பிரிவில் மட்டும் 204 வீடுகளில் படையினர் முகாமிட்டுள்ளனர்

## -வெளியேற மக்கள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தனியாருக்குச் சொந்தமான 204 வீடுகளில் படையினர் முகாமிட்டு நிலைகொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

1995 ஆம் ஆண்டுகளில் இருந்து மேற்படி வீடுகளில் படையினர் தொடர்ந்தும் நிலை கொண்டிருப்பதால் இவ்வீடுகளின உரிமையாளர்கள் குடியமர வீடுகளின்றி வாடகை வீடுகளிலும், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளிலும், அகதி முகாம்களிலும் நெருக்கடிகள் நிறைந்த அவல வாழ்வினை வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள சூழ்நிலையிலும் காரணமின்றி பொது மக்களது வாழ்விடங்களில் படையினர் நிலைகொண்டிருப்பது ஏற்க முடியாத ஒன்றாக காணப்படுவதால் இவ்வாறான தனியார் வீடுகளை விட்டு அகன்று மக்களது மீள்குடியமர்விற்கும் , இயல்பு வாழ்விற்கும் படையினர் வழிவிட வேண்டும் என இவ்வீடுகளின் உரிமையாளர்களால் கோரப்பட்டுள்ளது. இதேவேளை இவ்வாறான வீடுகளின் உரிமையாளர்களால் படையினரது இத்தகைய வாழ்வுரிமை மீறல்கள் தொடர்பாகவும், தமது வீடுகளில் அடாவடியாக நிலைகொண்டுள்ள படையினர் அகற்றப்பட வேண்டுமெனக் கோரியும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஏராளமான முறைப்பாடுகளை பாதிக்கப்பட்டோர் செய்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது. (33)

# பொதுத் தகவல் தொழில் நுட்பப் பாடம் அறிமுகப்படுத்த விரும்பும் அதிபர்கள் விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

பொதுத் தகவல் தொழில் நுட்பப்பாடத்தை தமது பாடசாலைகளிலும் ஒருபாடமாக அறிமுகப்படுத்த விரும்பும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள சகலபாடசாலைகளிலும் பயிலும் மாணவர்களின் பொதுத்தகவல் தொழில்நுட்பசார் அறிவினை மேம்படுத்தும் விதமாக அறிமுகமாகும் இப்பாடத் திட்டத்தினை தமது பாடசாலைகளில் அறிமுகப்படுத்த விரும்பும் அதிபர்களது விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# குடாநாட்டில் 'ஹலோட் ரெஸ்' நிறுவனத்தின் மிதிவெடி அகற்றும் பணி இடைநிறுத்தம்

## போக்குவரத்துச் சிக்கலே காரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கண்டி வீதி ஓரங்களிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் "ஹலோட் ரெஸ்" மிதிவெடிகள் அகற்றும் படையணியினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த வெடிபொருள் அகற்றும் பணிகள் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஹலோட்ரெஸ் படையணியினரது வாகனங்கள் சிலரால் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டில் மேற்படி படையினரது வெடிபொருள் அகற்றும் பணிகள் கடந்த 28 ஆம் திகதி வரை முற்றாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு இடை நிறுத்தப்பட்டிருந்த பணிகள் மீளவும் 'ஹலோட் ரெஸ்' படையினரால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் கண்டி வீதியிலும் அதன் ஓரங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வந்த வெடி பொருள் அகற்றும் பணிகள் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

விசமிகளின் தீக்கிரையாக்கலுக்கு இலக்காகி வாகனங்கள் சேதமடைந்திருப்பதால் ஏற்பட்டுள்ள போக்குவரத்துச் சிக்கல்களை காரணம் காட்டியே இப்பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் மக்களின் மீள் குடியமர்வு நடவடிக்கைகளில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது (33)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு குடாநாட்டில் 5000 மரக்கன்று நாட்டல்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயன்தரு மரக்கன்றுகள் நடுகை பண்ணப்படவுள்ளன.

அந்தவகையில் எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் இவை நடுகை செய்யப்படவுள்ளன.

யாழ். சங்கானைப் பிரதேச பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள், பனை, தென்னை வள அபிவிருத்திகள் [illegible] ந நடவடிக்கைகள் என்பன [illegible]றித்து ஆராயப்ப[illegible] (33)

### கிராம ரீதியாக விழிப்புக்குழுக்கள்

யாழ்.தீவகம் காரைநகர்ப் பிரதேசத்தில் கிராம சேவகர் பிரிவுகள் ரீதியாக விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகிறது. அண்மைக்காலமாக திருடர்களினது அடாவடித்தனங்கள், சட்டவிரோதமாக மணல் அகழ்தல், மரம் தறித்தல், ஆடுமாடுகளை வெட்டுதல், மதுபான விற்பனை போன்ற செயற்பாடுகளும், சமூகவிரோதிகளின் கலாசார சீரழிவுச் செயல்களைக் கட்டுப்படுத்தவே மேற்படி குழு அமைக்கப்பட்டுள்ளது.

# கருவேங்கைகளுக்குக் காணிக்கை...

## கரும்புலிகளாழீழம் உயர்ந்ததுவே

உள்ளத்து உணர்வுகளை யிறுக்கமாக்கி
உறவுகளி னிசைவுகளினின்று நீங்கி
எள்ளிநகை யாடுநிலை எம்மவர்க்கு
எதிர்காலத் தொருபொழுதும்
தோன்றாவண்ணம்
துள்ளியெழுந் தசையாத இலட்சியத்தோ
டுறுதியுடன் தம்முயிரி னாயுதத்தால்
நள்ளிரவில் களம்நுழைந்து பகைமுடிக்கும்
கரும்புலிக ளாழீழம் உயர்ந்ததுவே.

அதிகார மமதையினா லழினவநாடும்
ஆட்சியினைச் சுவைத்து நிற்கும் சந்திரிகா
விதியழுத்தத் தடுமாறிப் பழிக்கஞ்சாது
வேதனையை விலைகொடுத்து வாங்குவதால்
சதிவிளையு முள்ளத்துச் சூதினாலே
சினமூட்டிப் புலிகளோடு முட்டிமோதின்
பதிகாக்கும் கரும்புலிகள் கணம் திரண்டு
பதைபதைக்கச் சிங்களத்தைத்
தகர்த்தெறிவார்

வேங்கைகளின் வல்லமையால்
நிமிர்ந்தெழும்பும்
வெல்லுதற்கு மரியதான தமிழீழத்தின்
வீங்குகின்ற தோள்முறுக்கும் புலிகள் படை
வீணர்களி னினவாத சதிகளெல்லாம்
ஓங்கியொலி முழங்குகின்ற அதிரடியால்
தகர்த்தெறியும் போதினிலே யுள்நுழைந்து
ஏங்கிமுழு வுலகுமொன்றா யதிரும் வண்ணம்
சிங்களத்துப் படைதுடைக்கும் கரும்புலிகள்.

மாரீசன்

## கருவேங்கைகளுக்கென் சிறுவரிகள்

காற்றோடும் கடலோடும் கரைந்திட்ட கருவேங்கைக் குழந்தைகளே!- உமக்காய்
பாட்டோடு கவிபாடும் சிலவரிகள் புலம்புகிறேன் கேளீரோ!
ஊற்றோடு உடைத்தோடும் உலராத விழிநீரைத் துடைத்திடவே! எமக்காய்
வீட்டோடு பிள்ளைகளாய் விரைந்தோடி வாரீரோ!

செருப்பெனக் கால்மிதித்த தெருநாய்கள் கொடுமை கண்டு
நெருப்பெனக் கண்சிவந்து கருவேங்கை எனவாகினீர்.
தருக்கரவர் கதை முடிக்கச் செருக்களத்தில் எகிறி நின்று.
அரக்கரவர் அழிவு காண நரபலிக்கு முடிவாகினீர்.

வளமோடு வாழ்ந்த எங்கள் வாழ்வழித்த வீணருக்கு - தமிழன்
பலமோடு உள்ளானென்பதனைப் புகழோடு இடித்துரைத்தீர்.
நலமோடு நாமிருந்த நகர் புகுந்த நரிகளுக்கு - தமிழன்
களமாடி மண்ணுக்காய் மரணிப்பானென்பதனை வெடித்துரைத்தீர்

அயல் நாட்டுச் சிங்களவன் அணிவகுத்து எம்மண்ணின் - மானத்
துகிலுரிந்து தமிழினத்தைத் தொலைத்தழித்த வேளையிலே!
புயற்காற்று எனவாகிப் பகை வாசல் வீசியதால்
வெயில் பட்ட பனித்துளியாய்ப் பகைவனவன் தொலைந்தானே.

கல்லறையுமில்லையென்றான கருவேங்கை வீரர்களே மன
உள்ளறையில் உமையிருத்தித் தாலாட்டுப் பாடுகிறோம்.
சில்லறைக்காய்ச் சுழலுகின்ற சிற்றன்பப் பூமிதனில்
எல்லையில்லா வள்ளல்களே உமைப் போற்றிப் பாடுகிறோம்.

நெல்லையூர்க் கல்லூரியில் புல்லரைக் கொல்லப் புயலாகிய - எங்கள்
மில்லரெனும் வல்ல புலிவீரனவன் சல்லடையெனவான - கருங்
கல்லையும் கசிய வைத்துக் கண்ணீர் பெருகுமிந்நாளில்
இல்லையென்றாகிய பிள்ளைகளே உமை நினைந்துருகுகிறோம்.

உரும்பையூர் தனேஷ்

## வாழிகாட்டி வாழ்பவர்

ஆடும் கடலலைகள் பொங்கி
ஆர்ப்பரித்தும் நினைவெழுப்பும்
மீளும் தூய நினைவுகளில்
மீளாது பாட்டிசைக்கும்
கறுத்தவரி வேங்கைகளின்
கனவுகளைக் கோலமிடும்
வல் ஊறு தகர்த்தளித்த
வல்லவர்கள் கதை உரைக்கும்

காற்று வந்து தோள் தடவும்
காதோரம் விடை பகரும்
வீரியமாய் வாழ்ந்து நிற்கும்
கரியபுலி வீரம் பாடும்
தற்கொடையாய் ஈந்தவரின்
சொற்பதங்கள் ஊட்டி நிற்கும்
வலிமையாய் தமிழ் வாழ
வல்ல வழி சுட்டி நிற்கும்

கரும்புலிகள் நடைபயிலும்
கரிகாலன் தேசம- இதில்
கதிரவனின் கிரணங்களில்
கொதித்திருக்கும் வீரம்
செந்தணலில் எம் தமிழர்
வெந்ததொரு காலம் - இது
வரும் பகைவர் தாழ் பணியும்
கரும்புலிகள் காலம்.

வயவை
அ.யூலியஸ்



## உங்கள் சாவுக்குக் காரணம் நாங்கள்

எந்தத் தலைமுறையால் தமிழர்க்கு
இன்று இந்தநிலை ஏற்பட்டதோ
எந்தத் தலைமுறையின் தவறுகளால்
மாவீரர் பட்டியல் நீண்டு சென்றதோ
எந்தத் தலைமுறையால் தமிழர்களுள்
கரும்புலி என்ற உயிராயுதம்
கனவேகமாகத் தோன்றியதோ
அந்தத் தலைமுறையைச் சேர்ந்த ஒருத்தி
ஆற்றொணாத் துயருடன் அரற்றும் சொற்கள் இவை
கரும்புலி வீரரின் புகழ்பாட எமக்குக்
கடுகளவேனும் அருகதையுண்டா?
சாவுக்கு நாள்குறித்த சத்திய வீரரின்
சாதனை கூறிடச் சற்றேனும் தகுதியுண்டா?
அவர்களால் உடைக்கப்பட்ட கட்டடங்கள் போல்
அவர்களால் நொருக்கப்பட்ட கப்பல்கள் போல்
அவர்களால் சிதைக்கப்பட்ட அவர்களின்
உடல்கள்போல்
எங்கள் இதயங்களும் இன்று
உடைந்து நொருங்கிச் சிதைந்து
துண்டு துண்டாகியுள்ளன
வேகமாய் வீசி விண்சென்ற புயல்களே
அனலைக் கக்கிய எரிமலைகளே
தாகம் தமிழீழ தாயகம் எனக்கொண்டு
தலைவன் வழிநடந்த தியாகச் சுடர்களே
வாயாரப் போற்ற வார்த்தைகள் தெரியவில்லை
வருந்தும் தலைமுறை நாம் மன்னிப்பு
எமக்கில்லை
சரித்திரம் படைத்தவர்கள் நீங்கள்-உங்கள்
சாவுக்குக் காரணம் நாங்கள்.

மனோன்மணி நடராசா

## “எவராலும் அறிய முடியா அதிசயம்”

யூலை ஐந்து!
அடிமை இருள் அகன்ற பொழுது!
வரலாற்றை புரட்டியும் ஆழம் காண முடியாததோர் வலிமை.
எப்படி முடிந்ததென்று அகிலமே அண்ணாந்து வியந்த அதிசயம்.
தமிழரின் விடிவிற்காய் ‘மில்லர்’ தொடக்கிய தியாகம்!
இது எமது தேசத்தில் அழிக்கப்படாத மகிழ்வின் தொடக்கம்.
நேரத்தைக் குறித்து நோக்கிடும் வீரமும்...
காலத்தை எதிர் பார்த்து காத்திடும் துணிதலும்...
சக்கை கட்டிய புலியதின் சிரிப்பும்...
நெஞ்சிலே கலந்திடும் உத்தமர் செயல்திறன்
எப்படி எண்ணி பார்த்திட இயலும்!?
நெருப்பை நெஞ்சதில் கட்டிய புலியதின் வாயில்
பிறந்திடும் வார்த்தையை அளந்து நோக்கிட எப்படி முடியும்?
எவரும் அறிய முடியாததோர் உயரிய தியாகம்
வீரத்தின் தலைவன் காலமாய் வளர்த்தெடுத்த திட்டம்
கரும்புலி என்ற எம் தமிழீழ விருட்சம்
எவராலும் புரிய முடியாத அதிசயம்!

ம. அருள்யோண்சன்

## கரைவந்து காத்திருப்பேன்

வெள்ளி பூத்த இரவொன்றில்
விடை பெற்றாய்
வினாடிகள் கரைவதற்குள்
நீ கரைந்தாய்
துள்ளிக் குதித்த சுவடுகள் இன்னும்
தூர்ந்து போகவில்லை
அள்ளித்தின்ற வெள்ளித் தட்டோ
இன்னும்
காய்ந்து விடவில்லை.

அதற்குள் உம் சேதி
காற்றோடு கரைந்தது
உங்கள்
உடலைப் போல

ஓ...
அழகிய செவ்வானமே
அசைந்து வரும்
தென்றல் காற்றே
நான்
பழகிய கரையின் நுரைகளே!
பாடிவரும் அலைகளே!
எங்கே எனது நண்பன்.

நுரையே!
உனதின் மேல் தான்
அவனது.
இறுதிச் சுவடு பதிந்திருக்கும்

அலையே!
காற்றோடு கை கோர்த்து
நீதான் அவனை
தாலாட்டி சென்றிருப்பாய்.

செவ்வானமே!
ஏன் உனது முகம்...
இப்படி சிவந்திருக்கிறது
உண்மையைச் சொல்

ஒவ்வொரு நிலவிலும்
உங்களோடு திரிந்துறவாடிய
எனது நண்பன் எங்கே.

ஆக்கிரமிப்பாளன்..,
படகேறி சதிராட்டமாடி- எம்
உறவுகளை கிழித்தெறிந்த போதும்,
கரைவந்து குண்டு போட்டு
கொன்றொழித்த போதும்,
நீங்கள் தானே அவன் காதில்
கிசு கிசுத்தீர்களாம்

எங்களுக்காக.. எழுந்த வீரர்
கனவோடு...
இன்னொரு வெடிப்பிற்காக
கரை வந்து
காத்திருப்பேன்.

ஏ.காண்டீபன்
சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி

# கல்லறைக்குள் உறங்காத காவியங்கள்

சி. ஜெயதீபன்

மனிதனாகப் பிறந்தவன் எவனும் என்றோ ஒருநாள் இறக்கப் போவது உறுதி. ஆனால் நாள் குறித்து, நேரம் குறித்து மரணத்தை தேடி அதன் வாசலுக்கு செல்வதற்கு சுய நலன் உடைய எவரும் முன்வரமாட்டார்கள். ஆனால் தான் நேசித்த மண்ணுக்காக, தான் நேசித்த மக்களுக்காக தமது உடல், உயிர், உள்ளம் இவற்றை எல்லாம் அர்ப்பணிக்க துணிந்தவர்கள்தான் கரும்புலிகள். தமது மரணத்தின் மூலம் போராட்டத்தின் மிகப் பெரிய தடைக்கற்களை எல்லாம் இலகுவாக தமது உயிராயுதங்கள் மூலம் தகர்த்தெறிந்து போராட்டப் பயணத்தின் பாதையை செப் பனிட மூலகாரணியாகத் தேசியத் தலைவர்



அவர்களால் புடம்போட்டு வளர்க்கப்படு கின்ற தாயகத்தின் ஒளி விளக்குகள் தான் கரும்புலிகள். இவர்கள் நிகழ்த்திய சாதனை கள் எண்ணற்றவை கணக்கிட முடியாதவை. விடுதலைப் போராட்டமானது சாவும், அழிவும் தாங்க முடியாத துன்பங் களும் நிறைந்தது. இத்தனையையும் தாங்கிக்கொள்ள இரும்பை. ஒத்த இதயம், அசைக்க முடியாத நம்பிக்கை தளராத உறுதி வேண்டும் இத்தனையும் கொண்டவர்கள் கரும்புலிகள்.

1975ஆம் ஆண்டு புதிய தமிழ்ப்புலிகள் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பகாலங்களில் துரோகி களை அழிக்கின்ற பணிகளை செய்யவேண்டி இருந்தது 1982ஆம் ஆண்டு காலப்பகுதியின் பின்னர் புதிய தமிழ்ப்புலிகள் என்ற பெயர் தமிழீழ விடுதலைப்புலிகள் என பெயர் மாற் றம் செய்யப்பட்டு தமிழ் மக்கள் மீது இரா ணுவ வன்முறைகளை கட்டவிழ்த்து விட்ட சிங்கள கூட்டுப் படையினர் மீதும் பொலிசார் மீதும் தாக்குதல்கள் முனைப்புப் பெறத் தொடங்கியது. இதன் காரணமாக கட்டுப்பாட் டுப் பிரதேசங்கள் எமது மண்ணில் உரு வாகின. இந்நிலையில் 1987ஆம் ஆண்டு வடமராட்சி மண்ணை ஆக்கிரமிக்கும் நோக்குடன் 'ஒபரேசன் லிபரேசன்' நடவ டிக்கை ஆரம்பிக்கப்பட்டு யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் முகாம் அமைத்து இருந்த சிங்கள இராணுவத்தினர் மீது ஒரு கரும்புலித் தாக்குதலைச் செய்வது என முடிவெடுக்கப்பட்டது. அத்தாக்குதலைச் செய்ய தலைவர் அவர்களால் கரும்புலி கப்டன் மில்லர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வழி அனுப்பி வைக்கப்படுகின்றான். நெல்லியடி மகாவித்தியாலயம் நோக்கி சக்கை வண்டி விரைவாக சென்று கொண் டிருக்கிறது. இராணுவத்தினரின் சுடுகலன்கள் சக்கை வண்டியை சல்லடை போட்டு துளைக்கின்றது.

குறிப்பிட்ட இலக்கைஅடைந்ததும் மில்லரின் சக்கை வண்டி வெடித்து சிதறு கின்றது. இதுவரைகாலமும் இவ்வாறன தொரு தாக்குதலைச் சந்தித்திராத சிங்கள படைத்தலைமை மூளையைப் போட்டு குழப்பவேண்டிய நிலைமை தோன்றியது.

தமிழினத்தின் பெரியதொரு தடைக் கல்லை நீக்கி கப்டன் மில்லர் (வல்லிபுரம்- வசந்தன் / துன்னாலை யாழ்ப்பாணம்) போராட்ட வரலாற்றின் புதியதொரு தசாப்தத்தை தொடக்கி வைத்தான். கரும்புலி கப்டன் மில்லரின் தாய் "என்ர பிள்ளை எதைச் செய்தாலும் நல்லதற்காகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருந் தது. மற்றவர்கள் கஷ்ரப்படுவதைக் கண்டு மனம் பொறுக்க மாட்டான்" என்று கூறுவார்.

பூவிற்குள்ளும் பூகம்பம் தோன்றும் என்று கவிஞர்கள் கூறுவதைப் போல் பூவாக இருந்த மில்லர் புயலாக மாறிய வரலாற் றினைக் கண்கூடாகக் காண்கிறோம்.

தரையில் மட்டுமே இன்றி கடலிலும் சிங்களக் கடற்படைக்கு எதிரான கடற்கரும் புலித் தாக்குதல்களை செய்வதற்காக கடற்கரும்புலி அணி தலைவர் அவர்களால் கட்டியெழுப்பப்பட்டு வல்லைக் கடற்பரப்பின் கட்டளைக் கப்பல் ஒன்றை தாக்கி அழிக்க கப்டன் வினோத், மேஜர் கொலின்ஸ், கப்டன் காந்தரூபன் போன்ற கடற்கரும்புலி கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். மேஜர் காந்தரூபன் தலைவர் அவர்களிடம் 'அண்ணை என்னைப்போல் தமிழீழத்தில் ஒருவரும் அனாதையாக இருக்கக் கூடாது. அப்படியான அனாதைச் சிறுவர்களுக்காக ஒரு கல்லூரியை ஆரம்பி யுங்கள் இது தான் என்ர இறுதி விருப்பமாக இருக்கும். என்று கேட்கிறான் அவன் போட்ட விதை இன்று வளர்ந்து விருட்சமாகி காந்த ரூபன் அறிவுச்சோலை நிழல்பரப்பி நிற் கின்றது. அந்த கடற்கரும்புலித் தாக்குதலால் சிறிலங்காகடற் படையினரின் கட்டளைக்கப் பல் ஆட்டம் கண்டது.

கரும்புலித் தாக்குதலைச் செய்வது என்பது மிகவும் கடினமான விடயம் எவ்வித மான காப்புகளும் இன்றி வெட்டவெளியான கடற்பரப்பில் இழப்புக்கள் இன்றித் தாக்குதல்களைச் செய்வது என்பதும் அதன் மூலம் திட்டமிட்டபடி கடற்கலங்களை அழிப்பது என்பதும் சுலபமான காரியம் அல்ல. இவ்வாறான நிலையில் எதிரிகளின் குகைக்குள் புகுந்து அவர்களின் கடற்கலங் களை அங்கேயே அழிக்கும் முகமாக நீரடியிலான தாக்குதல்களைச் செய்வதற்காக நீரடி நீச்சல் பிரிவு அணி உருவாக்கப்பட்டது. முதற் பெண் கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணி நீரடியால் நீந்திச்சென்று காங்கேசன் து[illegible]முகத்தில் தரித்துநின்ற எடி[illegible]ரா கட்ட[illegible]க்கப்பல் தகர்த்து அழிக் கப்படுகின்றது. அவரது ஞாபகமாக அங்கயற் கண்ணி நீரடி நீச்சல் பிரிவும், ஆண்களிற்கான சுலோஜன் நீரடிநீச்சல் பிரிவும் உருவாக் கப்பட்டன.

தமிழீழ நிலப்பரப்புக்களில் மட்டுமன்றி போராட்டத்தின் பல தடைக்கற்களை நீக்குவ தற்காக பல்வேறு பிரதேசங்களிலும் முகம் தெரியாது, முகவரி அறியாமல் பல கரும் புலி வீரர்கள். காற்றோடு காற்றாக கலந்து விட்டுள்ளார்கள்

முற்றிலும் வேறுபாடான தளநிலை மைக்குள் மனித உணர்வுகளுக்கு வடிகால் அமைத்து, உறுதிப்பாட்டை குழப்பமடையச் செய்து விடும் சூழலிலும் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஒழுங்கு விதிகளை மதித்து தாம் எடுத்துக்கொண்ட பணியை செவ்வ னவே நிறைவேற்ற உறுதிதளராத இவ் வீரர்களது சாதனைகள் பல வெளிவராத உண்மைகளாக உறங்கிக்கொண்டு இருக் கின்றன. அவ்வாறான உண்மைகள் வெளி வரும் போது அவர்களின் உள்ளத்து உணர்வுகளால் உறைந்து போவீர்கள். எதிரி யின் மூளையைத் துளைத்து உள்நுளைந்து அவர்களின் நடமாட்டத்தை நாடிபிடித்தறிந்து அவர்களின் பிரதேசத்தில் வாழ்ந்த இவர் களின் பணி அளப்பரியது.

இவர்களின் மண் மற்றும் மக்கள் மீதும் தலைவர் மீதும் கொண்ட பாசமும், தனிமனித சக்திகளுக்கு அப்பாற்பட்டது. வீரன் ஒருவன் தனது பணிக்காக தாயகப் பிரதேசத்தை விட்டு செல்வதற்காக அனை வரிடமும் விடைபெற்றுத் தனது நண்பர் களுடனும், கூட்டிச்செல்ல வந்த தோழர் உடனும் சென்று கொண்டிருக்கிறான். திடீ ரென அவனது நடையில் ஒருதளர்வு தெரி கின்றது. கண்கள் கலங்க பக்கத்தில் காணப் படுகின்ற காட்டுத்துண்டு ஒன்றிற்குள் செல் கின்றான். சிறிதுநேரம் கழித்து தன் உடை மீதும், உதட்டின்மீதும் படிந்திருந்த மண் புளுதியினைத் தட்டியவாறு வந்தான் அனை வருக்கும் ஆச்சரியமாகஇருந்தது. அவனைக் கூட்டிச் சென்று கொண்டிருந்த தோழனிடம் சிறிதுதூரம் சென்ற பின்பு சட்டைப்பையில் இருந்து மண்ணை எடுத்து "மச்சான் இது எங்கட மண் இதை இனிமேல் நான் காணமாட்டேன் அதுதான்" என்றானாம். அந்த வீரனது மண்பற்றும், தேசப்பற்றும் எத் தகையது என்று சொல்ல இவ் ஒரு சம்ப வமுமே போதுமானது.



எதிரியின் பிரதேசத்தில் இலக்கை அழிப் பது என்பது கடினமானது. வாகன நெருக்க மும், சனசந்தடி நிறைந்த பிரதேசத்தின் இலக்கை இனம் கண்டு சரிவரத் தாக்குத் தூரத்துக்குள் இலக்கு அமையக் குண்டினை வெடிக்க வைக்கவேண்டும். சற்றுத் தாமதித் தாலும் இலக்குத் தவறிவிடும். திட்டம் பிசகிவிடும். பாரிய பின்னடைவுகளை சந்திக்க வேண்டியும் வரலாம். தாம் இறந்தாலும் இரகசியத்தை காப்பாற்ற வேண்டிய தேவை இவர்களுக்கு உண்டு. ஒரு சந்தர்ப்பத்தில் அந்தத் திட்டத்தின் தளபதியுடன் வீரன் ஒருவன் சென்று கொண்டு இருக்கிறான். தினம் தினம் தேடி அலைந்த இலக்கு ஒன்று மிக மிக சமீபமாக தாக்கு தூரத்திற்குள் வசதியாக வந் தமைந்தது. தாக்குதலை செய்ய வேண் டியது அந்த வீரனது பணி இலக்கை இனம் கண்டபின் தளத்தின் தளபதி இறங்கிவிட்டு அந்த வீரன் வண்டியை கொண்டு செல்ல வேண்டும். அந்த சமயத்தில் வாகனத்தை தளத்தின் தளபதி செலுத்திக் கொண்டு இருந்தான். பக்கத்து இருக்கையில் தாக்குதலை செய்ய வேண்டிய வீரன் தளபதி இறங்கிக் கொண்டு அவனை அனுப்பி வைக்க கால அவகாசம் கிடையாது இலக்கு சமீபமாக வந்து விட்டது. தளபதி கத்தினான் 'அமத்தடா' அந்த வீரன் சுவிச்சை அமத்த வில்லை இலக்கு கடந்து சென்று கொண்டு இருந்தது. திரும்பவும் தளபதி கத்தினான் 'அமத்தடா' அவன் அமத்தவே இல்லை இலக்கு கடந்து சென்று விட்டது. கோபத்துடனும் கொதிப்புடனும் தளபதி கேட்டான் 'ஏனடா அமத்தவில்லை' அதற்கு அந்த வீரன் "இந்தப்பணி இன்னும் தொடர்ந்து செய்யப்பட வேணும் என்பதற்காகத்தான்" என்றானாம். தான் மட்டும் நிறைவேற்ற வேண்டிய பணியை தளத்தின் தளபதியுடன் சேர்த்து குண்டை வெடிக்கவைத்தால் இவ்வாறான தாக்குதல்களை தொடர்ந்தும் செய்ய முடியாத நிலை வரும் அதற்காகத் தான் அந்த வீரன் இவ்வளவு வசதியாக இலக்கு பொருந்தி வந்தும் அந்தத் தாக்குதலை அவன் செய்யவில்லை. பின் வந்த ஒரு நாளில் அதே இலக்கை அதே வீரன் திட்டமிட்டபடி செய்து முடித்தான். இந்த முகமறியாத வீரர்களின் சாதனைகள் இவை மட்டுமல்ல. வெளிவராமல் இன்னும் பல சம்பவங்கள் வெளிவராத உண்மைகளாக உறங்கிக் கொண்டு இருக்கின்றன.

தமிழீழ விடுதலைக்காக கரும்புலியாக, கடற்கரும்புலியாக, முகமறியாத வீரர்களாக இதுவரையான காலப்பகுதியில் பல மாவீரர்கள் தமது இன்னுயிர்களை ஆகுதி ஆக்கியிருக்கின்றார்கள். இதுவரை 261 கரும்புலி வீரர்கள் வீர காவியமாகி இருக்கின் றார்கள். தரைக் கரும்புலிகளாக 59 ஆண் கரும்புலி வீரர்களும், 18 பெண் கரும்புலி வீராங்கனைகளும், 133 ஆண் க்டற்கரும்புலி வீரர்களும், 51 பெண் கடற்கரும்புலி வீராங் கனைகளும் கடலிலும் தரையிலும் சாதனை படைத்து வீரகாவியமாகி இருக்கின்றார்கள்.

தான் நேசித்த மண்ணிற்காக மக்களுக்காக ஒருவனால் செய்யக்கூடிய அதிஉச்ச தியாகத்தை கரும்புலிகள் செய்து இருக் கின்றார்கள். தமிழீழ விடுதலைப் போராட்டத் தின் பாரிய தடைக்கற்களை எல்லாம் தம் உயிராயுதங்கள் கொண்டு இலகுவாக அழித்த இந்த வீரர்களின் பணி அளப்பரியது. இவ்வாறானது என்று எவராலும் எடைபோட முடியாத சாதனைகள். இவர்கள் பிரபாகரன் வளர்த்தெடுத்த அக்கினிப் பிறவிகள். இவர்கள் ஈகம் என்றும் நிலைத்து நிற்கும். □

# 36 வங்கிக் கொள்ளைகள்

(கொழும்பு)

இவ்வாண்டின் கடந்த ஆறுமாத காலப் பகுதியில் சிறிலங்காவில் முப்பத்தாறு வங்கிக்கொள்ளைகள் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் தலைமையகக் குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு (2003) முதல் அரையாண்டில் 27 வங்கிக்கொள்ளைகள் இடம்பெற்றிருந்ததாகவும் அது தெரிவிக்கின்றது. மிக அதிகமான வங்கிக்கொள்ளைச் சம்பவங்கள் நுகேகொட மற்றும் பாணந்துறை பொலிஸ் பிரிவுகளிலேயே நடந்துள்ளன.

# வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் 248 ஆங்கில ஆசிரியர்கள் வெற்றிடம்

## -நியமனம் வழங்க பின்னடிப்பு

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் நீண்ட நாட்களாக பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றி வருபவர்களின் நிலை கேள்விக் குறியாகி வருவதாக வவுனியா பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பல ஆண்டுகளாக ஊதியத்தினைக் கருத்தில் கொள்ளாது, சேவையைக்கருத்தில் கொண்டு தாம் செயற்பட்டு வந்ததாகவும் எனினும் தமது வாழ்க்கையை இழந்து விட்டோம் என்னும் நிலை தோன்றி இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகப் பணியாற்றியோர் வவுனியா மாவட்டத்தில் 248 ஆங்கில ஆசிரியர்களுக்கு வெற்றிடம் இருப்பதாகவும் இந்த வெற்றிடங்களை பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களே நிரப்பி வந்ததாகவும் எனினும் இதனை அனைவரும் மறந்து இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது நிரந்தர நியமனம் தொடர்பாக எவரும் கரிசனை கொள்ளாது இருப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். பல ஆண்டுகளாக தாம் சேவை ஆற்றியபோது தமது சேவையை பெற்றுக் கொண்டவர்கள் இன்று தமது நிரந்தர நியமனத்தில் சற்றும் கரிசனை இல்லாது இருப்பதாக வும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.(21)


## விண்ணப்பம் கோரல்

நிதித்துறை வழங்கற்பகுதியால் தொடங்கப்படவுள்ள தையல் பயிற்சி நெறிக்குப் பொருத்தமான ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன. பயிற்சி நெறியில் தேர்ச்சியடைவோர் தகுந்த சம்பளத்துடன் பணிக்கு அமர்த்தப்படுவர், பயிற்சி செலவுகள் யாவும் (உணவு உட்பட) வழங்கற்பகுதியால் பொறுப்பேற்கப்படும்.

குறிப்பு:- தையல் அனுபவம் உடைய இருபாலாரும் சம்பளத்துடன் பணிக்கமர்த்தப்படுவர்.

வேண்டுகை முடிவுநாள்:- 20.07.2004

வேண்டுகைகள் அனுப்பவேண்டிய முகவரி:-

அந்திவானம் பதிப்பகம்,
கிளிநொச்சி.

அந்திவானம் பதிப்பகம்,
புதுக்குடியிருப்பு.

ஆளுகை,
வழங்கற்பகுதி,
நிதித்துறை.

(4758)



## அரும்புகள் பயிலரங்கம்

உதைபந்து ஆங்கிலம் அறிவுத்திறன் வலுவூட்டல்
தொடக்கவிழா



## நிகழ்ச்சி நிரல்

★ சுடரேற்றல்
★ தேசியக்கொடியேற்றல்
★ அகவணக்கம்
★ சிறுவர் செயற்பாடு
★ தலைமையுரை
★ சிறப்புரை
★ பயிற்சி ஒளிநாடா வெளியீடு
★ நன்றியுரை

காலம் :– 06. 07. 2004
இடம் :– இளையோர் செயற்பாட்டு நிறுவனம் கிளிநொச்சி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பதிவுசெய்த பங்குபற்றுநர்களை 06.07.2004 காலை 9.00 மணிக்கு இளையோர் செயலாண்மை நிறுவனத்திற்கு வருகைதரும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

அரும்புகள் பயிலரங்கம்
இளையோர் செயலாண்மை

(சி-9894)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### எல்லைப்படை வீரர்
### வீரவேங்கை சுதாகரன் (சுதா)

(விஜய சுந்தரம், சுதாகரன்
அன்பு அச்சக பணியாளர்)

ஜனனம் - 24 . 05 . 1981
வீரமரணம் - 05 . 07 . 2001

எமக்கு பெருமைசேர்த்த எங்கள் அருமை உறவே
ஆண்டுகள் மூன்றானாலும் எமை விட்டு உன் இழப்பு
எம் நினைவில் இன்னும் இழக்கவில்லை
எமை விட்டு அகலா உனது நீங்கா நினைவை
உயிருள்ள வரை உள்ளத்தில் சுமந்து நடப்போம்.

தற்காலிக முகவரி :–
சு.முத்துலிங்கம்,
177, சேவிஸ்வீதி,
கனகாம்பிகைக் குளம்.
கிளிநொச்சி.

நிரந்தர முகவரி :–
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
யாழ்.

(4770)

## எம் அணையா விளக்கே உன் ஐந்தாம் ஆண்டிலே!

தாயின் மடியில்
1975 ✪ 07 ✪ 05

மண்ணின் மடியில்
1999 ✪ 04 ✪ 17



### வீரவேங்கை நிதர்சனா

தவராஜா அருணா ( அனு )

மனித விழுமியத்தில் யாபேருக்கும்
வாழ்க்கை அமைவதில்லை
அமைந்தது எல்லாம்
வாழ்க்கையும் இல்லை - ஆனால்

மாவீரர் வாழ்வு அவ்வாறில்லை
அழியாப் புகழுடன்
அணையா விளக்குகள்

மீள நினைவுடன்
மீட்கும் உன்- உதிர
உறவுகளும் - அவர்கள்
இல்லத்து இணைவுகளும்

நிரந்தர முகவரி:-“ராஜஸ் வாசம்”
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தற்காலிக முகவரி:- புதுக்குடியிருப்பு
வள்ளிபுனம்
முல்லைத்தீவு.

அம்மா, அண்ணாமார், தம்பி,
அண்ணிமார், மருமகன்கள்.

(சி-9746)

# கரும்புலிகள் நினைவாக இன்று முதல் நிதர்சனநிறுவனத்தின் புதிய வெளியீடுகள்

## உயிராயுதம் - 5

- சூரியகதிர் எதிர் நடவடிக்கையில் அளவெட்டிப்பகுதியில் ஊடுருவிய கரும்புலிகள்.
- காரைநகர் கடற்படைத்தளத்தினுள் ஊடுருவிக்கடற்கலன்களைத் தாக்கியழித்த கரும்புலி.
- திருமலைத்துறைமுகத்தினுள் ஊடுருவி கடற்கலன்களை மூழ்கடித்த கரும்புலிகள்.
- கொழும்புத் துறைமுகத்தினுள் ஊடுருவித்தாக்கிய கரும்புலிகள்.

வீரமும் உணர்வளமும் நிறைந்த இந்தக்கரும்புலிகள் விடுதலையின் இலக்கில் நிகழ்த்திய கரும்புலித் தாக்குதல்களின் உண்மைச் சித்திரிப்புகள்.
கடற்கரும்புலி மேஜர் குமாரவேலின் தாக்குதல் சம்பவத்தை மையமாகக்கொண்டு உருவாக்கப்பட்ட குறும்படம் ஆகியவற்றைத் தாங்கி புதிதாக வருகிறது உயிராயுதம் பாகம்-05

எழுத்துரு:வாணன்-மைக்கல்
குரல்:வீரா,சுபா
ஒலிப்பதிவு:மலையவன்
படத்தொகுப்பு
அமைப்பு:சி.கோமகன்
அட்டைப்படம்:செந்தோழன்

குறும்பட உருவாக்கத்தில்
வாணன்-மைக்கல்
முல்லை ஜேசுதாசன்
தவநீதன்
மன்றவாணன்
மோகன்
அன்புக்குமரன்
குகதாஸ்
நிலவன்
சுதன்
இசைப்பிரியன்

உருவாக்கம் / வெளியீடு } நிதர்சனம்

## கடற்கரும்புலிகள் பாகம் -08

இசைவாணர் கண்ணனின் இசை நெறியாள்கையில் முரளி இசைத்தென்றல் உதவி இசையில்

புதுவை இரத்தினதுரை
நாவண்ணன்
வீரா
மனோன்மணி நடராசா

ஆகிய கவிஞர்களின் பாடல் வரிகளுக்கு

S.G. சாந்தன்
ஜெயா சுகுமார்
திருமலைச்சந்திரன்
நிரோஜன்
மணிமொழி
ஜெயபாரதி
வசீகரன்
திவாகர்

இவர்களின் குரல் வளத்துடன் கடற்கரும்புலிகள் பாகம்-08

தயாரிப்பு,நிர்வாகம்: தமிழன்.

உருவாக்கம்:
தர்மேந்திராக்கலையகம்,
நிதர்சனம்.

## ஞானரதனின் புயல் புகுந்த பூக்கள்

திரைக்கதை
வசனம்
இயக்கம்
ஞானரதன்

சிறிலங்கா அரசபடைகளால் 1997 மே, 13ஆம்நாள் தொடங்கப்பட்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகளின் கரும்புலிப்படையணிப் போராளிகள். ஆழ ஊடுருவும் வேவுப் படையணிப் போராளிகளுடன் இணைந்து மேற்கொண்ட வெற்றிகரத் தாக்குதல் சம்பவமொன்றை அடிப்படையாக கொண்ட வீடியோப்படம்.

பாடலிசை:முரளி
இசை:இசைப்பிரியன்
ஒலிப்பதிவு:அருமை,சிவா
படத்தொகுப்பு:செ.பாண்டியன்
ஒளிப்பதிவு:கிருபா,திலகன்

ஒளிப்பதிவு,
உதவி இயக்கம்:தவா

உருவாக்கம்:
திரைப்பட உருவாக்கப்பிரிவு,நிதர்சனம்.


SM GRAPHICS

வன்னி மண்ணில் தரம் மிக்க தங்க நகை வாணிபத்தினரான

## தமிழரசி நகைமாடம்

கிளிநொச்சி
விசுவமடு
புதுக்குடியிருப்பு
மல்லாவி
வட்டக்கச்சி
நாச்சிக்குடா

(சி-9898)


கரும்புலிகள் நாள் சிறப்பிதழ்
2004
யூலை - 05
கரும்புலி மில்லர் காட்டிய வழியில்
புல்லர்களை அழித்திட
தடம் பதித்த- எம்
தேசத்தின் புயல்களே
உம் பணி வரலாறு சொல்லும்.
தாயக மீட்புப்போரில் தம் உயிரை
ஈகம் செய்த கரும்புலிகள் அனைவரையும்
இந்நாளில் நினைவு கூருகின்றோம்.
கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும்
கிளைச் சங்கங்களும் முல்லை மாவட்டம்.



# கடந்த வாரத்தில்....

## 24.06.2004 - 30.06.2004

### 24.

ஈராக்கின் பலூஜா,ரமாடி, மெகல், யக்குபா ஆகிய நான்கு நகரங்களின் மீது ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட கார்க் குண்டுத்தாக்குதலில் 75 பேர் பலி, 216 பேர் காயம்.



தாக்குதலின் பின் தேடுதல்

*. தென்கிழக்கு ஈராக்கில் 4500 கலன் களுக்கு மேற்பட்ட எரிவாயுவை ஏற்றி வந்த எரிவாயுதத் தாங்கி ட்ரக் பஸ்வண்டி யொன்றுடன் மோதி வெடித்ததில் 70 இற்கு மேற்பட்டோர் பலி 100 பேர் படுகாயம்.

### 25.

*. துருக்கியில் இஸ்தான் பூல்லிலுள்ள பிரதான பஸ்நிலையத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 4 பேர் பலி.

*.ஜம்மு–காஷ்மீர் பூஞ் மாவட்டத் தற்காப்பு உறுப்பினர்கள் 10 பேர் உட்பட்ட 12பேர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவினால் இலங்கையின் கரையோர பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள கரேஜஸ் கப்பலை கடற் படைத்தளபதி தயாசந்தகிரி வோஷிங்டனில் கையேற்றார்.



கரேஜஸ்

*. ஈராக்கில் பலூஜா நகரில் அமெரிக்க விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 20 பொது மக்கள் கொல்லப் பட்டனர்.



பலூஜாவில் தாக்குதல்

*. இந்தியாவின் எல்லைக்கு உட்பட்ட காஷ்மீர் மாநிலத்தில் நடத்தப்பட்ட தாக்கு தலில் இராணுவத்தினர் உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர். 15 பேர் படுகாய மடைந்தனர்.

### 26.

பாகிஸ்தான் பிரதமர் பைருல்லாகான் ஜமாலி தனது பதவியை இராஜினாமா செய்தார்.

*. அமெரிக்க விமானப்படைக்கு முக்கிய தகவல்களை அனுப்புவதற்காக புளோரிடா மாநிலத்தில் உள்ள விமானப்படைத்தளத்தில் இருந்து போயிங் டெல்டா-2 செயற்கைக் கோள் அனுப்பி வைக்கப்பட்டன.

* ஈராக்கின் சீலா நகரில் மசூதி அருகே இரண்டு குண்டுகள் வெடித்ததில் 40 பேர் பலி, 23 பேர் காயம்.

### 27..

*மத்திய பாக்தாத்தில் பச்சை வலயம் என்று அழைக்கப்படும். ஐ.நா.கூட்டுப்படைக் கட்டடத்தில் அதிசக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்தது.

* இஸ்ரேல் தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்து காஸாப் பகுதியில் ஆயிரக் கணக்கான பலஸ்தீனர் ஆர்ப்பாட்டம்.

* இந்தியா கோமதி நகரில் நடைபெறும் திருவிழாவுக்கு பக்தர்களை ஏற்றிச்சென்ற படகு கவிழ்ந்ததில் 50 பேர் ஆற்றில் மூழ்கி மரணம்.

* மெக்சிக்கோ அரசு சட்டங்களை சரியாகப் பேணவில்லை என்பதை சுட்டிக்காட்டி அரசிற்கெதிராக ஆர்ப்பாட்டம்.

### 28.

* பாகிஸ்தானில் இடைக்காலப் பிரதமராக முஸ்லிம் லீக் கட்சியை சேர்ந்த சுஜந்கசைல் பதவியேற்றார்.

* ஈராக்கின் ஆட்சிப்பொறுப்பை அந்த நாட்டின் இடைக்கால அரசிடம் அமெரிக்கா கையளித்தது.

* மேற்குக் கரைப்பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று முக்கிய தீவிரவாதிகளின் தலைவர்கள் உட்பட 7பேர் கொல்லப் பட்டனர்.

* துருக்கியில் நேட்டோ மாநாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டு தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தில் பொலிசார் கண்ணீர்ப் புகை பிரயோகம், தடியடி நடத்தியதில் 30 பேர் காயம்.




எதிர்ப்புப் போராட்டம்

### 29.

* பாக்தாத்தின் கிழக்குப் பகுதியில் அமெரிக்க வாகனத்தொடரணி மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் மூவர் பலி, பலர் படுகாயம்.

### 30.

* முன்னாள் ஈராக்கிய சனாதிபதி சதாம் உட்பட 11 பேர் ஈராக்கிய இடைக்கால அரசின் சட்டநடவடிக்கைகளுக்காக அமெரிக்காவி னால் கையளிக்கப்பட்டனர்.



கையளிக்கப்பட்ட சிலர்

# சுதந்திரபுரம் மக்கள் படுகொலை 6ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு

(உடையார்கட்டு)

சிறிலங்கா இனவாத அரசின் கண்மூடித்தனமான விமான, எறி கணைக் குண்டு வீச்சுத்தாக்கு தலின் போது கொல்லப்பட்ட 25இற்கு மேற்பட்ட மக்களின் 6ஆம் ஆண்டு நினைவுநாள் சிறப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இரவு உடையார்கட்டு, சுதந்திரபுரம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் இப்பகுதிக் கிராம அலுவலர் சுந்தரலிங்கம் தலைமை யில் இடம்பெற்றது.

நினைவு நாள் நிகழ்விற்கான பொதுச்சுடரை வன்னி பாராளு மன்ற உறுப்பினர் கனகரத்தினம், புளியம்பொக்கணை ஆலய குருக் கள் ஆகியோர் ஏற்ற, லெப். கேணல அம்மா/அன்புவின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை முல்லை. மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணை ஏற்றிவைத்தார்.

நினைவுநாள் கருத்துரையை வன்னி பாராளுமன்ற உறுப்பினர், கனகரத்தினம், முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் பல பொது அமைப்புப்பிரதிநிதிகள், மக்கள் என ஆயிரத்திற்குமேற்பட்டோர் கலந்து சிறப்பித்தனர். (19)

# ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரைக் கைது செய்ய அரசாங்கம் முயற்சி

ஐக்கிய தேசியச்கட்சியின் அதிக மான பாராளுமன்ற உறுப்பினர் களைக் கைதுசெய்ய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுவரு வதாக ஐ.தே.க.கட்சியின் முன் னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாத்தளையில் மாகாண சபைத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத் தில் கலந்து கொண்டு உரையாற் றிய வேளை இதனை வலியுறுத்தி யுள்ளார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

அரசாங்கம் இவ்வாறான நடவ டிக்கையின் மூலம் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ள ஓர் நிலைப் பாட்டை தடைசெய்வதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார். இதற்கமைய ரவி கருணாநாயக் கவை கைதுசெய்ய இருந்தவேளை அது தடுக்கப்பட்டது. எனவே இவ் வாறான குற்றச்சாட்டில் நானும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர் களும் கைது செய்யப்படுதற்கான வாய்ப்புகள் இருப்பதாக மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே இவ்வாறான ஓர் நட வடிக்கைக்கு ஐ.தே.கட்சி ஒரு போதும் இடமளிக்காதெனவும் ஐ.தே.கட்சி தொடர்ந்தும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஓர்கட்சி என்ப தால் அரசு எடுக்கின்ற இவ்வாறான நடவடிக்கைகளுக்கு முழுமையாக எதிர்ப்பு தெரிவிக்குமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.கட்சி வெற்றி பெறும் எனவும் தெரிவித்தார். தற்போது அரசாங்கம் பாராளு மன்றத்தில் பெரும்பான்மையை இன்றும் காட்டமுடியாதுள்ள அரசு எதிர்வரும் மாகாணசபையிலும் தோல்வி காண்கின்ற வேளை அரசாங்கம் தொடர்ந்து செல்ல இடம் பெறாத ஓர் நிலை ஏற்படு மென தெரிவித்தார். இம்மாகாண சபைத் தேர்தல் முடிந்த பின்னர் பெற்றோல், மண்ணெய்யின் விலை 4ரூபாவால் அதிகரிக்குமெனவும், பாணின் விலை 4.40 சதத்தால் உயரு மெனவும் தெரிவித்துள்ளார். (32)

# ஆரம்பக் கல்வி மாணவர்களின் உபகரணக் கண்காட்சி நிகழ்வு

கிளிநொச்சி மகாவித்தியா லயத்தில் ஆரம்பகல்வி மாணவர்க ளின் உபகரணக்கண்காட்சி நிகழ்வு கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

காலை 11.15 மணிக்கு வித்தி யாலய மண்டபத்தில் ஆரம்பமான இந்நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக தமிழீழத் தேசியக் கொடியினை ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் பொன். தில்லைநாதன் ஏற்றிவைக்கப் பாட சாலைக்கொடியினை பாடசாலை யின் கனிஷ்ரபிரிவு அதிபர் திருமதி விநாயகமூர்த்தி ஏற்றினார் வித்தி யாலய அதிபர் வ.யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வானது தரம் 01 தொடக்கம் 05 வரையான வகுப்புக்களின் கல்விசார் உபகரணங்களும் ஏனைய அறிவியல் மற்றும் விவசாய ரீதி யான பொருட்களும் கண்காட் சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மிக ஆர்வத் துடன் கலந்துகொண்ட இக்கண் காட்சியினை ஏனைய வகுப்பு மாணவர்கள், ஆசிரியர்கள் பெற் றோர்கள் எனப் பலரும் பார்வை யிட்டு பாராட்டியிருந்தனர். (ச.லோ)

# பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு

(வவுனியா செய்தியாளர்)

பூந்தோட்டம் நலன்புரி நிலை யத்தில் நீருக்குப் பெரும் தட்டுப் பாடு நிலவுவதனால் அங்கு தங்கி யிருக்கும் இடம் பெயர்ந்த மக்கள் பெரும் கஷ்ரத்தினை எதிர்நோக்கு கின்றனர்.

இந்நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களின் தேவைக்கென வவுனியா அரச செயலகத்தினால் பௌசர்கள் மூலம் நீர்வழங்கப்படு கின்றது. எனினும் இப்பகுதியில் உள்ள கிணறுகளில் நீர் முற்றாக வற்றிவிட்டமையால் மக்கள் பெரும் கஷ்ரத்தினை எதிர்நோக்கு கின்றனர்.

பௌசர்கள் வந்தவுடன் மக்கள் வரிசையில் நின்று தமக்குத் தேவையான குடிநீரைப் பெறுவத னையும், குளிப்பதற்காக வெளிக் குளம் பகுதிக்கு மக்கள் செல்வத னையும் அவதானிக்க முடிகிறது.(10)

# முறைப்பாடு

பிரதிப்பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ணவிற்கு எதிராகப் பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப் பாடொன்று செய்யப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே ஏதோவோர் குற்றத்திற்காகப் பொலிஸ் சேவை யிலிருந்து விலக்கப்பட்டு மீண்டும் பொலிஸ் சேவையில் மாற்று பெயரை பயன்படுத்தி வந்துள்ளார் என அம் முறைப்பாட்டில் குற்றம் சாட்டப்பட் டுள்ளது. இது தொடர்பாக சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு விசா ரணைகளை மேற்கொண்டு வரு கிறது. இதில் அவர் குற்றவாளி யாக இருப்பாராயிருந்தால் அவர் க்கு கடுமையான தண்டனை வழங்கப்படும். (32)

# 3ஆம் வருட நினைவலைகள்

## வீரவேங்கை உதயராஜ்

(நடராசா உதயராஜ்)



பிறப்பு:- 17.05.1977

வீரச்சாவு:- 05.07.2001

எம் பாசப்பிணைப்பான உதயராஜனே!
எம் தேசத்திற்காய் உயிர்நீத்த மாவீரனே!
எமைவிட்டு நீ சென்று மூவாண்டு ஆனதுவோ
எமக்கிங்கு விழிதனிலே நீர் வற்றிப் போனதுவோ
ஆண்டுகளில் மூவாண்டென்ன முந்நூறு ஆண்டுகளும் ஓடலாம்
ஆனபோதும் நாமிருக்கும் காலம்வரை நீங்காது
உன் நினைவு மறையாது எம் துயரம்

இவரோடு வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூறுகின்றோம்.

தகவல்:- மு.நடராஜா (தந்தை)
144/1விசுவமடு

(4776)

-நட்வேட்ஸ் முக்கோண கிரிக்கெட்போட்டி-

# மேற்கிந்திய தீவுக்கு மீண்டும்தோல்வி; நியூசிலாந்து அணிக்கு 05 விக்கெட்வெற்றி




நட்வேட்ஸ் கிண்ணத்துக்காக இங்கிலாந்தில் நடைபெற்று வரும் முக்கோண ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து மேற்கிந்திய தீவுகளுக்கு இடையிலான போட்டியில் நியூசிலாந்து 05 விக்கெட்டால் வெற்றி பெற்றுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் 46.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றது.

அணித்தலைவர் பிறைன் லாறா 58 ஓட்டங்களையும், ராம்நரேஷ் சர்வான் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.கிறிஸ்கெய்ன்ஸ், இயன்பட்லர் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 46 ஓவர்களில் 05 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.மார்சல் ஆட்டமிழக்காது 75 ஓட்டங்களையும், அணித்தலைவர் பிளெமிங் 45 ஓட்டங்களையும், பெற்றனர்.கடந்த சனியன்று நடைபெற்ற போட்டியில் மேற்கிந்தியதீவு அணியை இங்கிலாந்து அணி 07விக்கெட்டுகளால் வெற்றிபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

# எதிரணியை விட ஓரளவு சிறப்பாக ஆடியதால் வெற்றி வாய்ப்பு கிட்டியது- கில்கிறிஸ்ட்



அவுஸ்திரேலியாவுக்கும், சிறிலங்காவுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஆடுகளம் டெஸ்ட் போட்டிகளுக்கு பொருத்தமற்றது என்று முதலாவது டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியின் தலைவர் அடம்கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

டார்வின் நகரில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது அவர் இதனைத்தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த கில்கிறிஸ்ட் உலகின் இரண்டு பிரபல அணிகள் கலந்து கொண்ட டெஸ்ட் போட்டி ஒன்று மூன்று நாட்களுக்குள் முடிவடைந்தமை பொருத்தமற்ற ஆடுகளமே என்று தெரிவித்தார்.

சிறிலங்கா அணியை விட ஓரளவு வெற்றிகரமாக துடுப்பெடுத்தாட முடிந்ததாலேயே தமது அணிக்கு வெற்றி வாய்ப்புக் கிட்டியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆடுகளத்தில் துடுப்பெடுத் தாடுவது மிகவும் சிரமமான காரியம் என்று சிறிலங்கா அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஆடுகளங்களை டெஸ்ட் போட்டிகளுக்குத் தெரிவு செய்வது போட்டித்தன்மையையும் அதன் தரத்தையும் பெருமளவு குறைத்துவிடும் என்று சிறிலங்கா அணியின் பயிற்சியாளர் ஜோன்டைசன் தெரிவித்துள்ளார்.

# சிம்பாப்வே அணியைக் காப்பதற்கே வந்தோம்;அழிப்பதற்கல்ல எமக்கு தீமை இழைக்கப்பட்டாலும் கிரிக்கெட்டைக் காப்போம்

ஸ்ருவர்ட் ஹார்லைல்

சிம்பாப்வே கிரிகெட் அணியின் வெள்ளையின வீரரான ஸ்ருவர்ட் ஹார்லைல் தாம் சிம்பாப்வே அணியை காப்பதற்கே வந்ததாகவும், அழிப்பதற்கல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் கவுண்டி அணிகளுக்கெதிராக ஆடச்செல்லவிருக்கும் பிரச்சினைக்குள்ளாகிய வீரர்கள் அங்கு செல்வதற்காக நிதி வசூல் செய்யும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார். அத்துடன் சிம்பாப்வே கிரிக்கெட் சபை அணிக்கு வீரர்களைத் தெரிவுசெய்யும் போது அரசியலும், இனப்பாகுபாடும் காட்டப்படுவதாக தெரிவிக்கின்றார். எமக்கு இவ்வாறு தீமை இழைக்கப்பட்டாலும் நாம் கிரிக்கெட் விளையாட்டை பாதுகாக்கவே உள்ளோம்; அழிப்பதற்கல்ல என்று தெரிவித்துள்ளார்.தமது நாட்டுக் கிரிக்கெட் சபையின் இந்த நடவடிக்கை அண்மையில் ஆரம்பித்த ஒன்றல்லன்று கூறிய அவர் 2001ஆம் ஆண்டு முதலே இந்த நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கையால் தமது வீரர்கள் 35பேரை இழந்து விட்டதாகக் கூறும் ஹார்லைவ் சர்வதேச தரத்துக்கு வீரர்கள் உருவாகியிருப்பதாக தெரிவிக்கிறார்.

பங்களாதேசத்திற்கு எதிராக மார்ச்சில் நடைபெற்ற போட்டியின் போது மாஷலெண்ட் மாகாண வீரர்கள். 5பேரைச் சேர்க்காது விட்டால் மைதானத்தை பழுதாக்கி விடுவார்களோ என்ற பயத்தில் சிம்பாப்வே கிரிக்கெட் சபை எட்டு மணித்தியாலமாக கூடி ஆராய்ந்தது எனவும் ஸ்ருவட் தெரிவித்துள்ளார். பலர் தம்மை அரசியல்வாதிகளைப் போல் நோக்குவதாகவும், தாம் அரசிய2லில் ஈடுபடப் போவதில்லை எனவும் கிரிக்கெட் மட்டுமே தமது ஒரே நோக்கம் எனவும் கூறியுள்ள அவர் தமது பிரச்சினைகளை வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்பு கிரிக்கெட் சபை தீர்த்துவைக்கும் என நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். இதன் போது நூறுபேர் சமுகமளித்திருந்தனர்.

# சர்வதேச புகழ்பெற்ற கால்பந்து நடுவர் பியர்லிகி கொலினா ஓய்வுபெற விருப்பம்



இத்தாலிநாட்டைச் சேர்ந்த பியர்லிகி கொலினா சர்வதேச கால்பந்தாட்ட நடுவர் பணியிலிருந்து ஓய்வுபெறவிரும்புவதாக அறிய வருகிறது.

எதிர்வரும் 2005 பெப்ரவரியில் 45 வயதை பூர்த்தியாக்கும் இவர் சர்வதேச புகழ்பெற்ற நடுவராகக் கருதப்படுகிறார். 2002இல் நடைபெற்ற உலகக்கிண்ணத்துக்காக பிரேசிலும் ஜேர்மனியும் மோதிய இறுதிப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்த இவர் 2004 யூரோ கிண்ண இறுதிப் போட்டியின் மத்தியஸ்தர் பதவியை ஜேர்மனியைச் சேர்ந்த மாக்கஸ் மேர்க்கிடம் ஒப்படைத்துவிட்டார்.

1999 ஆம் ஆண்டு யூரோ கிண்ணப் போட்டியின் போது இறுதி லீக் போட்டியில் தோல்வி கண்ட ஜேர்மன் வீரரை ஆறுதல் படுத்தியதை அவர் இன்னும் மறக்க முடியாது என தெரிவித்துள்ளார். அண்மையில் செக்குடியரசுக்கும் கிறிசுக்குமிடையில் அரையிறுதிப் போட்டியே இவருக்கான இறுதிப் போட்டியாகும்.

# சர்வதேச கால்பந்தாட்ட போட்டிகளிலிருந்து பிரான்சின் முன்னாள் தலைவர்ஓய்வுபெற்றார்



கால்பந்தாட்ட உலகில் தலைசிறந்த வீரராக இருந்து தன்னை நிருபித்து காட்டி பதினொரு வருடங்கள் கால்பந்து போட்டிக்காக தன்னைஅர்ப்பணித்து 116 போட்டிகளில் விளையாடிய பெருமைக்குரிய வீரரான பிரான்ஸ் நாட்டின் முன்னாள் கால்பந்து அணித்தலைவர் மார்ஷல் இஸ்சைலி தாம் சர்வதேச கால்பந்து போட்டிகளில் இருந்து ஓய்வுபெறப் போவதாக அறிவித்துள்ளார்.

இவர் நேற்று தனது ஓய்வு அறிவிப்பை பிரெஞ் தொலைக்காட்சி ஒன்றிற்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.


35 வயதுடைய மார்ஷல் இஸ்சைலி மிகச் சிறப்பான முறையில் அணியை தலைமை தாங்கிச் சென்றவர்.

1998 ஆம் ஆண்டு உலகக்கிண்ண போட்டியிலும், 2000 ஆம் ஆண்டுள் யூரோ கிண்ணப் போட்டியிலும், சம்பியனாக பிரான்ஸ் உருவாவதற்கும் காரணமாக அமைந்து, அணியை வழி நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் இறுதியாகவிளையாடிய போட்டி நேற்று நடைபெற்று முடிந்த யூரோ கிண்ண கால்பந்து போட்டியில் லீக் போட்டி ஒன்றில் குரோசியாவுக்கு எதிரான போட்டியாகும்.

-விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ்-

# ஆடவர் ஒற்றையர் பட்டத்தை சுவிற்சர்லாந்தின் பெடரர் கைப்பற்றினார்



லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை உலகின் முதல் நிலை வீரரான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் வென்றெடுத்தார்.

நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் மற்றுமொரு முன்னணி வீரரான அமெரிக்காவின் அன்டி ரொடிக்கை கடுமையான போராட்டத்தின் பின் பெடரர் வெற்றி பெற்றார்.


மேற்படி வெற்றி மூலம் கிறாம்ஸ்லாம் பட்டம் வென்ற முதலாவது சுவிற்சர்லாந்து வீரர் என்ற பெருமையை பெடரர் தனதாக்கினார்.

# தமிழீழ தேசிய இளையோர் விளையாட்டு விழாவில் இரண்டாம் நாள் நிகழ்வில் இருந்து சில பதிவுகள்



படங்கள்-செல்வூா

## சிந்தனைக்கு



மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லா தொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம்; அந்தத் தெய்வீகப் பிறவிகள் தான் கரும்புலிகள்.

தமிழீழதேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 05-07-2004
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## இறவாவரம்

இன்று கரும்புலிகள் நாள். தற்கொடை, தியாகம் என்பனவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளப்படும் கரும்புலிகளை நினைவிற் கொள்ளும் உயர்விற்குரிய நாள்.

கரும்புலிகளின் தியாகம், அர்ப்பணிப்புக்கள் என்பனவற்றைக் கூறித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதல்ல. அவ்வாறு கூறித்தான் தெரிந்து கொள்வதானால், அவர்கள் தமிழர்களாகவும் இருக்க முடியாது.இதற்கு அப்பால் இலங்கையில், ஏன் தென்னாசியப் பிராந்தியத்திலேயே வாழ்பவராகவும் இருக்கமுடியாது.

இப்போர் வடிவமானது, சிறிலங்கா அரசிற்கும், அதன் ஆயுதப் படைத்தரப்பிற்கும் கொடுத்த அதிர்ச்சிகளும், ஆச்சரியங்களும் மிகப் பெரியது. அத்தோடு, இலங்கையின் வரலாற்றையே தீர்மானிப்பவர்களாகக் கரும்புலிகள் இருந்துள்ளனர். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் இன்று சர்வதேச ரீதியில் முனைப்புப் பெற்ற போராட்டங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுவதற்கு இக்கரும்புலிகள் ஆற்றிய பங்கும் பணிகளும் முக்கியமானவை.

இப்போர் வடிவமானது, ஒடுக்குமுறையாளர்களால் விமர்சனத்திற்கும், கண்டனத்திற்கும் உள்ளாவதுண்டு. ஆனால், சிறிய இனமொன்று அணி திரண்ட ஒடுக்குமுறைச் சக்திகளுக்கு எதிராக போராடவும், தன்னைத் தற்காத்துக் கொள்ளவும் இப்போர் வடிவமானது முக்கியத்துவம் மிக்கதொன்றாகும். இப்போர் வடிவத்தை எதிர்ப்பவர்கள் அன்றி விமர்சிப்பவர்கள் சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பாதுகாக்கவோ, பகிர்ந்தளிக்கவோ தயாராக இருப்பதில்லை. அவர்கள் இப்போர் வடிவம் குறித்து அச்சம் கொண்டதன் வெளிப்பாடே இதன் மீதான குற்றச்சாட்டிற்குக் காரணமாகும்.

விடுதலைப்புலிகளுக்கும் – சிறிலங்கா அரசிற்கும் இடையில் யுத்தம் ஓர் உச்ச நிலையைத் தொட்டு, அதன் பின்னர் அமைதிச் சூழ்நிலை ஒன்று உருவாகியுள்ளதெனில் அதில் கரும்புலிகளின் பங்கு,பணி அளப்பரியது. கரும்புலிகள் இன்றி இன்றைய சமாதானச் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கவும் மாட்டாது. நீடித்துச் செல்வதாகவும் இருக்கமாட்டாது.

சிறிலங்கா அரசின் இராணுவ மேலாதிக்கம் என்ற இலக்கிற்கு முற்றுப்புள்ளி வைத்தவர்கள் கரும்புலிகள். இவர்கள் மேற்கொண்ட துணிகரமானதும், வெற்றிகரமானதுமான தாக்குதல்களின் விளைவே சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக இருந்ததெனில் மிகையாகாது.

இக்கரும்புலிகள் அணி குறித்து சிறிலங்கா அரசு எப்பொழுதும் தீவிரகவனம் கொண்டதாகவே இருந்து வந்துள்ளது. கரும்புலிகள் அணியை விடுதலைப்புலிகள் கலைத்துவிட வேண்டும் என அழுத்தம் கொடுக்கும் வகையிலான இராஜதந்திர நடவடிக்கைகளில் கூட அக்கறை காட்டியிருந்தது. இதற்குச் சில நாடுகளின் ஒத்தாசையும் கிடைக்கப்பெற்றிருந்தது.

ஆயினும், கரும்புலிகள் அணி என்பது விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து பிரிக்கப்பட முடியாததொன்றாகியுள்ளது. ஏனெனில், தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் போர் வடிவமாக, உயிராயுதமாக அது வளர்ச்சி கண்டுள்ளது.

அத்தோடு, சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்பொழுது 'இழுபறி' நிலை ஒன்றை எட்டியுள்ளபோதும் சிறிலங்கா அரசாங்கம் போர் ஒன்றை ஆரம்பிக்காமல் இருப்பதற்கும் இக்கரும்புலிகள் அணிகளே முக்கிய காரணியாகவுள்ளனர். இத்தகையதொரு அணி இல்லை எனின் சிறிலங்கா அரசு இதுவரையில் யுத்தத்தில் மற்றுமொரு கட்டத்தைத் தொடங்கியிருக்கவும் கூடும்.

அதாவது, இன்று அமைதிச் சூழலை உருவாக்கியவர்களும், அதனைப் பாதுகாப்பவர்களாகவும் கரும்புலிகளே உள்ளனர். இவர்களை இப்பணியில் இருந்து விலக்கிவிட முடியுமானால், தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றிபெற்றுவிடலாம் என்பது சிறிலங்கா அரசின் மதிப்பீடாகும்.

இத்தகைய வலிமைமிக்க சக்தியாகவுள்ள கரும்புலிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விலக்க முடியாத சக்தியாகப் போராட்ட வரலாற்றைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளனர் என்பதே யதார்த்தமாகும். அதாவது,தமிழ்இனத்தின் பாதுகாவலர்களாகவும், தமிழரின் உரிமைப் போராட்டத்தின் இடையூறுகளை விலக்கும் சக்தி பொருந்தியவர்களாகவும் இவர்கள் இருந்துள்ளனர். இதற்காக இவர்கள் செய்த அர்ப்பணிப்புக்களும், தியாகங்களும் ஈழத்தமிழர் உள்ளவரை இறவாவரம் பெற்றவையாக இருக்கும்.

# பாராளுமன்றை முன்பே கூட்டுவதுபற்றி பிரதமரே தீர்மானிக்க வேண்டும்

## அமைச்சர் ஜெயராஜ்பெர்னாண்டோ புள்ளே

தேவை ஏற்பட்டால் குறித்த திகதிக்குமுன்னர் பாராளுமன்றத்தைகூட்டுவதற்கு அரசாங்கம் தயாரென அரசாங்கப் பிரதமகொரடா ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் மீண்டும் இம்மாதம் 20ஆம் திகதி கூட்டப்படவேண்டும் என்பதை சகல அரசியல்கட்சிகளின் தலைவர்களும் இணங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே இத்திகதிக்கு முன்னர் பாராளுமன்றஅமர்வைக் கூட்டுவதாயின் அதற்கான காரணத்தை எதிர்க்கட்சிகள் தெரிவிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். முன் கூட்டியே பாராளுமன்றத்தைக் கூட்டுவதாயின் அதற்கான தீர்ப்பை பிரதமரால்தான் வழங்க இயலுமென அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் கட்சித்தலைவர்கள் இன்று கூடவுள்ள கூட்டத்தில் இவ் விவகாரம் குறித்து ஆராயவுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத ஆயுதங்களை கையளிக்க கால அவகாசம்

சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றைக் கையளிப்பதற்காக இரு மாதகால அவகாசம் வழங்கப்படவுள்ளதாக சிறிலங்காஅரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து செப்ரெம்பர் மாதம் இறுதி வரையுள்ள காலப்பகுதிக்குள் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றை அண்மையிலுள்ள காவல்துறைப் பணிமனைகளில் ஒப்படைக்கலாம் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு அமைச்சு அறிவித்துள்ளது.இம்மன்னிப்புக் காலம் முடிவடைந்ததும் சிறிலங்கா பொலிசார் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதேவேளை, இலங்கையில் 30 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் தற்சமயம் பாவனையில் இருப்பதாகத் தெரிவித்துள்ள சிறிலங்காவின் மக்கள் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ இதன் காரணமாகவே குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாகவும் கூறியுள்ளார். (32)

# மாலைதீவிலிருந்து 06 அரசியல்வாதிகள் இலங்கையில் தஞ்சமடைந்தனர்

மாலைதீவில் இருந்து ஆறு அரசியல்வாதிகள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள். மாலைதீவு சனநாயகக் கட்சியைச் சேர்ந்த இவ் ஆறு அரசியல்வாதிகளும் கொழும்புக்கு வந்து ஒரு பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை வைத்துள்ளார்கள். வெளியேற்றப்பட்ட அரசியல் கட்சி உறுப்பினர்களின் ஊடகப் பேச்சாளரான முகமட் லத்தீப் இந்த ஊடக மாநாட்டிலே தெரிவிக்கும் போது மாலைதீவு சனாதிபதி சனநாயகத்தை நிலை நாட்டுவதற்கான வாய்ப்புக்களை வழங்கமாட்டார் எனவும், சனாதிபதியின் கட்சியைத் தவிர வேறெந்தக் கட்சியும் மாலைதீவிலே பதிவு செய்யமுடியாதெனவும் தெரிவித்ததோடு, ஒவ்வொரு கிளர்ச்சிகளின் பின்னரும் குறிப்பாக 1990 ஆம் ஆண்டுகளின் பின்னர் ஏற்பட்டகிளர்ச்சிகளின் பின்னர் ஆட்சியிலே சில மாற்றங்கள் கொண்டுவரப்படும் எனக் கூறப்பட்ட போதிலும் அவ்வாறான எந்தவொரு மாற்றத்தையும் கொண்டுவரவில்லை எனவும், இதேவேளை ஒவ்வொரு கட்சிக்கும் உரிய இடங்களை ஒதுக்கவில்லையெனவும் கூறியுள்ளனர். இவர்கள் ஆறு பேரும் மாலைதீவுக்கு மீண்டும் சென்றால் அங்கே கைது செய்யப்படுவார்கள் என்பதால் இலங்கையிலே தங்கியுள்ளனர்.

தற்போது இலங்கையில் இருக்கின்ற அரசியல் சூழ்நிலைகளும் மாலைதீவு போன்ற அரசியல் நிலைமைபோன்றே காணப்படுவதாகவும், குறிப்பாக இலங்கையிலே இருக்கின்ற பாதாள உலகக் கும்பல்களுடன் தொடர்புகளை வைத்திருந்து தம்மைக்கொல்வதற்குத் திட்டமிடுவதாகவும் இவ் ஆறு பேரும் தெரிவித்துள்ளனர்.

# விரும்பிய மாதிரிஅரச ஊழியரின் சம்பளத்தை உயர்த்த முடியாது

## ----சிறிலங்காபிரதமர் மகிந்த ராஜபக்ஷ----

(கொழும்பு)

விரும்பிய மாதிரியாக அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த முடியாது என பிரதமர் மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த அரசின் காலத்தில் இது மாதிரியான தான்தோன்றித்தனமாக செயற்பட்டு அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரித்தாலேயே தற்போது சுகாதார சேவை ஊழியர்களிடையில் சம்பள முரண்பாடு தோன்றியிருப்பதாக தெரிவித்த அவர் சம்பளமுரண்பாட்டை ஆராய்ந்து சிபாரிசு செய்ய ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு சம்பள உயர்வு களை வழங்குவதற்கு அமைச்சின் செயலாளர்களுக்கோ அல்லது பணிப்பாளர் சபையினருக்கோ அதிகாரம் வழங்கப்படமாட்டாது.

கடந்த காலத்தில் சுகாதார ஊழியர்கள் தமது சம்பளக் கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதுக்கு அதிகாரிகளின் அசட்டையீனமே காரணமாகும்.எனவே அரச, கூட்டுத்தாபன ஊழியர்களின் சம்பளத்தை நிர்ணயிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்படும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

# தப்பி ஓடிய சிப்பாயின் சகோதரன் குண்டுடன் கைது

'கிரனைட்' வைத்திருந்த நபர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்ற வியாழன் மீற்றியகொடப் பகுதியில் சீனத்தயாரிப்பு கிரனைட் கைக்குண்டை வீட்டினுள் மறைத்துவைத்திருந்த குறித்த நபரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்நபரின் சகோதரர் ஒருவர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர் என்றும் கொலைக்குற்றத்திற்காகக் காலி சிறையில் தடுப்புக் காவலில் உள்ளார் என்றும் இவரே அக்கைக்குண்டைக் கொடுத்திருக்கலாம் என்றும்பொலிசார் கூறியுள்ளனர்.

# ஐக்கியதேசியக் கட்சி உயர் தலைவர்கள் இந்தியாவிற்கு விஜயம் செய்யத் திட்டம்

நாட்டின் சமாதான நடவடிக்கைகளுட்பட ஏனைய இரு நாட்டுப் பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சு நடத்தவென எதிர்க் கட்சியின் பிரதான தலைவர்கள் இம்மாதம் இந்தியா செல்லவிருப்பதாக இந்தியத்தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் முதற்கட்டமாக முன்னாள் ஐ.தே.முன்னணியின் பொருளாதாரமறுமலர்ச்சி விஞ்ஞானதொழில் நுட்ப அமைச்சராக மிலிந்த மொறகொட இந்தியா சென்று இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கையும், வெளியுறவுத்துறையமைச்சர் நட்வர்சிங், பாதுகாப் பமைச்சர் டிக்சிற் ஆகியோரையும் சந்தித்து இலங்கையின் சமாதானம் பற்றி, இருதரப்பு பேச்சுநடத்த வுள்ளதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.

இதனையடுத்து பிரதமர் மகிந்தராஜபக்ஷவும் இந்தியாவின் அழைப்பை ஏற்று அங்குசெல்லவிருக்கின்றார். அதனைத் தொடர்ந்து எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தியப் பிரதமரையும் வெளிநாட்டு அமைச்சரையும்சந்தித்து உரையாடவிருக்கின்றார். இவை யனைத்தும் சமாதானப்பேச்சுகள் பற்றியதாகவே இருக்குமென தூதரகவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

-முல்லை.கரும்புலிகள் தினபெருவிளையாட்டுவிழா-

# மல்யுத்தம், குத்துச் சண்டைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பதக்கம் வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு முல்லை கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசமும் அதன் இணைநிறுவனங்களும் இணைந்து தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் நடத்திவரும் கரும்புலிகள் பெருவிளையாட்டுப் போட்டிகளின் மூன்றாம்நாள் போட்டி நேற்று முல்லைத்தீவில் வெகுசிறப்பாக நடைபெற்றுள்ளது.

மாலை 6.00மணிக்கு முல்லைத்தீவு கடற்கரையில் அமைந்துள்ள சுற்றுலா மையத்தில் தமிழீழ தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.கனகரத்தினம், முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் ஜெகநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். மைதானத்தில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டிருந்த கரும்புலிகளின் பொது உருவப்படத்திற்கு கடற்கரும்புலி கப்டன் தோழனின் தாயார் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். இதனைத் தொடர்ந்து சுற்றுலாமையத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் சொர்ணம் ஆசிரியர் அவர்களின் யோகாசனக் கண்காட்சி நிகழ்வு இடம்பெற்றது.


இதனைத் தொடர்ந்து மல்யுத்தம், குத்துச்சண்டை ஆகிய பெரும் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றன. இதில் மல்யுத்தத்தில் 35-40, 42-47, 47-52, 52-58, 60ற்கு மேல் ஆகிய நிறை அடிப்படையில் 30 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் 35-40 வரையான நிறையை உடையவர்களுக்கான இறுதிப்போட்டியில் சந்திரன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சு.நிஷாந்தன், 42-47 வரையான நிறை உடையவர்களில் முல்லை ஒற்றுமை அணியைச் சேர்ந்த சு.சேக்ஸ்பியர், 47-52 கிலோ நிறையை உடையவர்களில் முல்லை ஒற்றுமை அணியைச் சேர்ந்த சு.ரமேஸ், 52-58 கிலோ நிறைய்ய உடையவர்களில் பலாலி சாந்தன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த யோ.தயான், 60க்கும் மேலான நிறையை உடையவர்களில் முல்லை ஒற்றுமை அணியைச் சேர்ந்த தி.அருள் றெஜிபேட் ஆகியோர் மல்யுத்தப் போட்டியின் இறுதிப் போட்டியில் பங்கு கொண்டு முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை நிறை அடிப்படையி( ) ஆறு பிரிவுகளாக நடத்தப்பட்ட குத்துச் சண்டைப் போட்டியில் 44 போட்டியாளர்கள் பங்கு பற்றினர். இவர்களில் 37 கிலோ நிறைக்கு உட்பட்டவர்களில் செல்வா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ய.தமிழ்நேசன், 37-42 கிலோ நிறையையுடையவர்களில் செல்வா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த த.யசோதரன், 42-47 கிலோ நிறையுடையவர்களில் முல்லை ஒற்றுமை அணியைச் சேர்ந்த ஆ.சதீஸ்குமார், 47-52 கிலோ நிறையுடையவர்களில் செல்வா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தொ.ஜெனிபேட், 52-60கிலோ நிறையுடையவர்களில் செல்வா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வி.ரஜீவ்குமார், 60கிலோ நிறைக்கும் அதிகமானவர்களில் முல்லை ஒற்றுமை அணியைச் சேர்ந்த கி.ரமேஸ் ஆகியோர் இறுதிப் போட்டிகளில் பங்குகொண்டு முதலிடங்களைப் பெற்றுக் கொண்டனர்.


மேற்படி போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் முதலாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு கடலிலும், தரையிலும் காவியம் படைத்த கரும்புலிகளின் உருவப்படம் பொறிக்கப்பட்ட வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன இவற்றை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை வழங்கிக் கௌரவித்தார். இதே வேளை வானவேடிக்கை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மேற்குக் கட்டளைத்தளபதி கேணல் பால்ராஜ், முத்ததளபதி கேணல் சொர்ணம், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், போராளிகள் பொதுமக்கள் என பெருமளவிலானோர் கலந்து கொண்டனர். (லோ,ச,20)

முல்லை.பெரு விளையாட்டு விழாவில்....




குத்துச்சண்டை




மல்யுத்தம்

# அபிவிருத்தி தொடர்பாக மட்டுமே வெளிநாட்டவர் கலந்துரையாடலாம்

*உள்விவகாரங்களில் தலையிடக்கூடாதென்றார் விமல்வீரவன்ச*

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டு வெளிவிவகாரங்களில் வெளிநாட்டவர்கள் முடிவெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனினும் இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாட மட்டும் முடியுமென ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று மாகாணசபைப் பிரசாரக் கூட்டத்தில் கருத்துவெளியிட்ட அவர் தாம் ஆட்சிக்கு வந்த 3மாதத்தில் பல முன்னேற்ற கரமான விடயங்களை நாடு எதிர்கொண்டது எனத் தெரிவித்தார். எதிர்வரும் 3மாதத்திற்குள் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (32)

# சிறில.உளவுப்பிரிவுத் தலைவர் கருணா விவகாரத்தால பதவியிழப்பு

சிறிலங்கா இராணுவத்தின் உளவுப்பிரிவின் தலைமையில் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவை படையினர் கொழும்புக்கு அழைத்துச் சென்றமை குறித்து இராணுவ உளவுப்பிரிவினர் சிறிலங்கா அரசாங்கத்திற்கு தெரிவிக்காமையே இப்பதவிநீக்கத்திற்குக் காரணமென அரசுடன் தொடர்புடைய வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. இதுவரை காலமும் உளவுப்பிரிவின் தலைவராக இருந்த பிரிகேடியர் கபில ஹேந்விதாரண அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில் புதிய தலைவராக பிரிகேடியர் தயாரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஜீப் தீக்கிரை

புறக்கோட்டைப் பகுதியில் மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரின் ஜீப் வண்டி இனந்தெரியாதோரால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இந்தத் தீவைப்புச் சம்பவத்தின் போது தீக்கிரையான ஜீப் வண்டி சிறிஜெயவர்த்தனபுர மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவருடையதென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# யூரோ -2004 கால்பந்து கிண்ணத்தை போர்த்துக்கல்லை வீழ்த்தி கிரீஸ் சுவீகரித்தது!

யூரோ-2004 கால்பந்து இறுதிப்போட்டியில் போர்த்துக்கல் அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்ற கிரீஸ் அணி 2004ற்கான ஐரோப்பிய கால்பந்து கிண்ணத்தை சுவீகரித்தது. இன்று அதிகாலை போர்த்துக்கல்லின் லிஸ்பன் நகரில் 55,000 ரசிகர்கள் அரங்கில் திரண்டிருக்க நடைபெற்ற பரபரப்பான இறுதியாட்டத்தின் 57ஆவது நிமிடத்தில் கிரீஸ் அணிக்கு கிடைத்த அருமையான கோணர்வாய்ப்பை செரஸ்ரியாஸ் கோலாக மாற்றினார். அதுவே வெற்றிக்கோலாகவும் அமைந்தது.

## ஜே.வி.பி...

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியினரின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் மக்கள் விடுதலை முன்னணியினரின் கூட்டம் நடைபெற்ற இடத்தைத் தாண்டிச் செல்லும் வேளை இரண்டு கட்சியினரின் ஆதரவாளருக்கிடையே முறுகல் நிலை ஏற்பட்டு மோதல் வெடித்தது. இந்த மோதலை அடக்குவதற்காக அவ்விடத்திற்கு விரைந்த பொலிசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மக்களால்....

வைத்திருக்கும் நம்பிக்கை படுமோசமாக இருப்பதாகவும் கணீப்பீட்டு அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. அத்துடன் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனங்களில் முதலிடத்தை இராணுவமும், கல்வி முறைமை, மதஅமைப்புகள், சுகாதார நடவடிக்கைகள், சட்டத்துறை, என்பன திருப்தி தருவனவாக அமைவதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது.

## சூழ்ச்சி....

தீர்மானம் எடுத்திருந்தார் இதன் மூலம் தான் நாட்டின் பிரதமராக வருவதற்கு ஏற்பாட்டினை செய்திருந்தார். ஆனால் பாராளுமன்றத்தில் அத்திட்டம் நிறைவேற்ற முடியாமல் போய் உள்ளது. ஆகவே சனாதிபதி இந்த சூழற்சி முறையை அமுல் படுத்துவதற்கு தீர்மானம் எடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## கருணா...

றப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் விதத்தில் பிரதேசவாதக்கருத்துக்களைத் தூண்டிவரும் துரோகி கருணாவிற்கு தற்போதைய ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி வழங்கிவரும் உதவிகள் உடனடியாக நிறுத்தப்படுவதுடன்,

தமிழர் தாயகப் பகுதிகளினை அபிவிருத்தி செய்து தமிழ் மக்களுக்கான இயல்பு வாழ்வினை ஏற்படுத்தும் விதமாக தமிழ் மக்களது ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற விடயம் உட்பட பல விடயங்களை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள், அரசியல்குழு உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர். (33)

## காலை....

நினைவாலயத்தில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. முல்லைத்தீவு நகரில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் சிறப்புற நடை பெறவுள்ளன. மாங்குளத்திலும் சிறப்பான முறையில் கரும் புலிகள்நாள் நிகழ்வுகள் எழுச்சியுடன் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கிளிநொச்சி நகரில் அமைக் கப்பட்டுள்ள கரும்புலிகள் நினைவாலயத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. திருகோணமலை பிரதான நிகழ்வு காலை விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதி யான மூதூர் கிழக்கு-சேனையூர் மத்திய கல்லூரியில் நடைபெறும். தொடர்ந்து மாலை நிகழ்வு திருகோணமலை நகர்சிவன் கோவில் மைதானத்தில் நடைபெறுமென அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மாலை 7.30 மணியளவில் ஆரம்பமாகும் நிகழ்வில் சிறப்புரைகள் மற்றும் பண்பாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

திருகோணமலையைச் சேர்ந்த பதினெட்டு கரும்புலிகளின் திருவுருவப்படங்களும் சிவன்கோவிலடி மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்ட கப்பல் வடிவமேடையில் மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்படும்.

இப் பதினெட்டு திருவுருவப்படங்களும் நேற்று (ஞாயிறு) கிழக்கு துறைமுக நகர்ப் பகுதியெங்கும் பவனியாக எடுத்து வரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

யாழ்.குடாநாட்டில் நெல்லியடியில் உள்ள மில்லர் சதுக்கத்திலும், புங்குடுதீவில் உள்ள பெருங்காட்டுச் சந்தியில் உள்ள கந்தசுவாமி ஆலய முன்றலிலும் காரை நகரில் கதிர்காம சுவாமி ஆலய முன்றலிலும் மாலை 4.30மணிக்கு கரும்புலிகள் தின விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதன்போது விசேட பாண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதைகள் ஊர்திப்பவனிகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

கரும்புலிகள் நாளை முன்னிட்டு தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது. சிவப்பு, மஞ்சள் கொடிகளும் கறுப்புக் கொடிகளும், நிகழ்வுகள் நடைபெறும் இடங்கள் கரும்புலிகளின் நினைவாலயங்கள், வீதிகள், பாசறைகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், குடியிருப்புக்கள் ஆகியவற்றில் கட்டப்பட்டுள்ளன. முக்கிய இடங்களில் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஒலி பெருக்கிகள் மூலம் கரும்புலிகள் பாடல்களும் எழுச்சிப் பாடல்களும் ஒலி பரப்பப்ட்டுவருகின்றன. (சோ,33,08)

## வீதியால்....

கேட்க முற்பட்ட வேளை தமது கைத்துப்பாக்கியையும், கத்தியையும் காட்டி மிரட்டியுள்ளனர். அத்தோடு சைக்கிளில் வந்த நபருக்கு கூரிய ஆயுதத்தால் தாக்கியும் உள்ளனர். அவ்விடத்தில் திரண்ட மக்கள் ஈ.பி.டி.பி. உறுப்பினரை எதிர்த்துத் தாக்கினர். இதன்போது ஈ.பி.டி.பி உறுப்பினர் நீகன் காயப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்தோடு காயமடைந்த இளம் குடும்பஸ்தர் பிரபுவும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவத்தையறிந்து அவ்விடத்திற்கு விரைந்த ஊர்காவற்றுறைப் பொலிசார் சம்பவத்தை அவதானித்தனர். பின்னர் இராணுவத்தின் பாதுகாப்புடன் பிக்கப் வாகனம் ஒன்றில் வந்த ஈ.பி.டி.பி.யினர் தாக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை மீட்க முற்பட்ட போது மக்கள் நியாயம் கேட்டு ஈ.பி.டி.பி.யினரைத் தாக்க முற்பட்டனர். இராணுவத்தினரும், பொலிசாரும் ஈ.பி.டி.பி.யினரையும் மோட்டார் சைக்கிளையும் பாதுகாப்புடன் மீட்டுக்கொண்டு சென்றனர். மக்கள் இச்சம்பவத்தைத் தொடர்ந்து கொதிப்படைந்த நிலையில் உள்ளனர். (33,36)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.